தமிழ் முரசு

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்



1950

அக்டோபர்

விலை 4 அணா

KIZAR

Estd. 1886.

"CHOP KRUSI"

THE KING OF SARONGS

The Cheapest in Price and the Best in Quality and Durability ★



Designs Attractive & Up-to-Date Colours Fast and the Best Guaranteed

BRANCHES

The Far East :—

241, BEACH ROAD, SINGAPORE.
111, CHULIA STREET, PENANG.
67, BATU ROAD, KUALALUMPUR.

Ceylon :—

129, 131, 2nd CROSS STREET, PETTAH, COLOMBO.

Selling Agents :

ALL OVER INDIA, ARABIA, AFRICA & EAST INDIES

Head Office :—239, ANGAPPA NAICK STREET
MADRAS - 1.

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி 4 : : சென்னை 1950-அக்டோபர் : : பகுதி 6

பொருளடக்கம்

●

தண்டன் தலைமையுரை	....	தலையங்கம்	2
மலை மறைந்தது	....		7
வீரபாண்டியக் கட்டபொம்மன்	....		9
அறமும் மறமும்	....	நாமக்கல் கவிஞர்	16
மானங்காத்த பாண்டியன்	....	கவிமணி	17
அடிகள் போற்றிய தியாகிகள்	....		20
சீர்திருத்தச் செம்மல் காந்தி	....	'ஞானம்'	25
திருப்பத்தூர் மாநாடு	....		30
தமிழரசு பெற்றே தீருவோம்!	....	ம. பொ. சி.	38
தமிழரசும் மார்க்ஸியக்கோட்பாடும்	....	க. முத்தையா	41
நாடகத்தில் கட்டபொம்மன்	....	டி.கே. சண்முகம்	47
செய்திகள்	....		55

"செங்கோல்"

(தமிழ் அரசு இயக்க வாரப் பதிப்பு)

ஆசிரியர்: ஆ. கொ. வேங்கடராமானுசம்

●

விரைவில் வெளி வரும்

○ துவக்க ஏற்பாடுகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

தமிழ் முரசு

திருவள்ளுவராண்டு 1981 புரட்டாசி

தண்டன் தலைமையுரை

திரு. புருடோத்தம தாஸ் தண்டன் தலைமையில் நாசிக் காங்கிரஸ் நடந்து முடிந்து விட்டது. நாசிக்கில் தண்டன் நிகழ்த்திய தலைமையுரை தமிழ் மக்கள், குறிப்பாக தமிழ் நாட்டுத் தேசியவாதிகள் கருத்தூன்றிக் கவனிக்கத் தக்கதாகும். திரு. தண்டன் நெடுநாளைய காங்கிரஸ்வாதி; காங்கிரஸ் நடத்திய போராட்டங்கள் பலவற்றிலும் நேரடியாகப் பங்கு கொண்டவர்; சிறைசெல்லும் 'பறவை'யாகவோ, மேடைப் பேச்சாளராகவோ மட்டுமில்லாமல், ஆக்கவழியில் பணிபுரிவதிலும் ஆற்றலுடையவர். இது காரணமாகவே, காந்தியடிகளுடன் பலகாலம் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் படைத்திருந்தவர். ஆகவே, தண்டன் தலைமையுரை காங்கிரஸ் கொள்கைகளுக்கும், நடைமுறைக்கும் ஒத்ததாக - காங்கிரசை முற்போக்குப் பாதையில் செல்லத் துரிதப் படுத்துவதாக இருந்திருக்க வேண்டும். ஆனால், தலைவர் தண்டன் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இதற்கு நேர்மாறாக இருக்கின்றன.

இந்து அகதிகள் பாதுகாப்பு, அயல் நாட்டுக் கொள்கை, கண்ட்ரோல், இந்திமொழி, இந்திய கலாச்சாரம் ஆகிய விஷயங்களில் காங்கிரஸ் கொள்கைக்கும் நடைமுறைக்கும் மாறான கருத்துக்களைத் தண்டன் வெளியிட்டிருக்கிறார்.

அகதிகள் பாதுகாப்பு

பாகிஸ்தானிலிருந்து இந்தியா திரும்பும் இந்து அகதிகளுக்காக, பண்டிதநேரு அரசாங்கம் ஆண்டுதோறும் முப்

பது கோடி ரூபாய் செலவழித்து வருகிறது. அவர்கள் உயிரையும், உடைமைகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் அவ்வப்போது மேற்கொண்டு வருகிறது. ஆனல், தண்டன் இவற்ருேடு திருப்தியடையத் தயாரில்லை. அகதிகளுக்கு நேரு அரசாங்கம் தரும் நிவாரணம் போதாதெனக் குறை கூறுகிருர். அதுமட்டுமல்ல; "இவர்கள் பாகிஸ்தானில் இழந்துவிட்ட சொத்துக்களின் மதிப்பு மூவாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய்; இந்த இழப்பை ஈடுசெய்ய இந்தியா முழுவதுக்கும் தேசீய வரி விதிக்க வேண்டும்" என்கிருர் தண்டன். வட இந்தியாவில் இந்து அகதிகள் படும் அல்லல்களை நாம் அறிவோம். ஆகவே, அவர்களின் நல்வாழ்வுக்கு வழி செய்ய வேண்டுமென்பதை நாமும் அங்கீகரிக்கிருேம். ஆனல், 30 லட்சம் அகதிகளைக் காப்பதற்காக 35 கோடி மக்களுக்கு - மூவாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய் 'தலைவரி' விதிக்கப்படுமானல், இந்தியர் அனைவருமே அகதிகளாக வேண்டியதுதான்! பாகிஸ்தான் பிரிவினையை இந்திய மக்கள் ஏற்றுக் கொண்டதற்காக திரு. தண்டன் முப்பத்தைந்து கோடி மக்களுக்கும் தண்டவரி விதிக்க விரும்புகிருர் போலும்!

அயல் நாட்டுக் கொள்கை

பண்டித நேரு அரசாங்கம் கடைப்பிடித்து வரும் அயல் நாட்டுக் கொள்கையை, தண்டன் பொதுப்படையாக வரவேற்றிருக்கிருர். என்ருலும், "அந்தக் கொள்கையால் இந்தியாவுக்கு சாதகம் ஏற்பட்டது போலவே, பாதகமும் ஏற்பட்டுள்ளது" எனக் குற்றமும் சாட்டுகிருர். மேலும்,

> "அமெரிக்க - ரஷ்ய வல்லரசுகளில் எந்த ஒன்ருேடும் நாம் சேராமல் இருப்பதால், அந்த வல்லரசுகள் இரண்டுமே இந்தியாவைச்சந்தேகிக்க இடமேற்படுகிறது. இது நமது அயல்நாட்டுக் கொள்கையிலுள்ள ஒரு குறைபாடு."

> "பாக்கிஸ்தானை எதிர்கால நேச நாடாகச் சேர்த்துக் கொள்வதற்கு சில சுயநல நாடுகள் முயற்சிக்கின்றன. ஆகவே, நமது கொள்கையிலுள்ள குறைபாட்டைப் போக்கி இரண்டு வல்லரசுக் குழுக்களில் ஏதாவதொன்றுடன் அதிக நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்வது பற்றி எதிர்காலத்தில் இந்தியா கவனிக்க வேண்டியிருக்கலாம்."

எனக் கூறியிருப்பதன்மூலம், நேரு அரசாங்கத்தின் அயல் நாட்டுக் கொள்கையில் தமக்குள்ள அதிருப்தியை வெளிப் படுத்தியிருக்கிறார் தண்டன்.

நேருவின் அயல் நாட்டுக் கொள்கையை அங்கீகரிக்கத் தயங்கும் தண்டன், அதை எப்படித் திருத்த வேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். எந்த வல்லரசுடன் இந்தியா சேருவது? ருஷ்யாவுடனா, அல்லது அமெரிக்காவுடனா? இதைத் தெளிவாக்காமல் "ஏதாவது ஒரு வல்லரசுடன்" எனக் குழப்பிப் பேசுவது தமக் குள்ள பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாகும்.

கண்ட்ரோல்

அத்தியாவசியமான பொருள்கள் மீது விதிக்கப்பட் டுள்ள கட்டுப்பாட்டை எடுக்க முடியாதென்கிறது நேரு அரசாங்கம். தலைவர் தண்டன் இது விஷயத்திலும் அபிப் பிராய பேதப்படுகிறார். பற்றாக்குறை ஏற்படும்போது கட்டுப்பாடு அவசியம்தான் என்பதை தண்டனும் ஒப்புக் கொள்கிறார். ஆனால்,

> "தவிர்க்க முடியாத நிலைமை தோன்றும்போது தான் அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும். இதுதான் பிரச்னைக்கு நேர்மையான பரிகாரம்."

என்று விளக்கம் தருகிறார். கட்டுப்பாட்டைத் தவிர்க் கக் கூடிய சாதாரண நிலையில் இந்தியா இருப்பதாக அவர் நினைக்கிறார் போலும்! உண்மையில், கட்டுப்பாட் டால் கஷ்டமடைபவர்கள் மத்தியதர வகுப்பினரும் சாதா ரண மக்களுமேயன்றி, பணக்காரக் கூட்டத்தார் அல் லர். ஆகவே, கட்டுப்பாடுகளை நீக்குவதால் மக்கள் கஷ் டம் நீங்குமானால், தலைவர் தண்டன் கூறுவதை நாமும் தயங்காமல் ஆதரிப்போம். ஆனால், கட்டுப்பாட்டை அகற் றினால் கஷ்டம் அதிகரிக்குமேயொழிய குறையாது. பற்றாக் குறை நீங்காத நிலையில், கட்டுப்பாட்டை எடுக்கவேண்டு மென்று கூறுபவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ கள்ள மார்க்கெட்டை விஸ்தரிக்கத் துணைபுரிகின்றனர்.

இந்தி மொழி

திரு. தண்டனின் தலைமையுரையில் தமிழ் மக்கள் கவ னிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. ஒன்று பொது

மொழியைப் பற்றியது; மற்றொன்று பொது கலாச்சாரத்தைப் பற்றியது.

முதலில் பொது மொழியை எடுத்துக் கொள்வோம். இந்திதான் இந்தியாவின் பொதுமொழி என்பது சட்டரீதியாக நிச்சயிக்கப்பட்டு விட்ட விஷயம். ஆகவே, இந்தியின் அவசியத்தைப் பற்றி தண்டன் வற்புறுத்தியிருப்பதை ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால், இந்தியை உடனடியாக அரசு மொழியாக்க வேண்டுமென்கிறார் தண்டன். ஏனைய விஷயங்களில் நேரு அரசாங்கத்தோடு தமக்குள்ள கருத்து வேற்றுமையைச் சுற்றி வளைத்து சூசகமாக வெளியிட்டுள்ள தண்டன், இந்தியைப் பொறுத்தமட்டில் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார். குடியரசுச் சட்டம், "இன்னும் பதினைந்தாண்டுகளுக்கு ஆங்கிலமே இந்தியப் பொது மொழியாக இருக்கும்" என்று கூறுகிறது. இந்தப்பகுதியை சட்டத்திலிருந்து நீக்கிவிட்டு இந்தியை இப்போதே அரசு மொழியாக்கிவிட வேண்டுமென்கிறார் திரு. தண்டன். அ. நி. மன்றத்தார் தண்டனின் கருத்தைப் புறக்கணித்துத்தான் ஆங்கில மொழி பதினைந்தாண்டுகளுக்கு அவசியமெனத் தீர்ப்பளித்தனர். ஆகவே, மீண்டும் தண்டனின் கருத்து வழி நேரு அரசாங்கம் அரசியலைத் திருத்தாதென நம்புகிறோம். பொதுமொழி விஷயத்தில், தண்டன் குழுவினருக்கு வெகுதூரம் விட்டுக்கொடுத்தாகி விட்டது.

நாகரி லிபியில் எழுதும் இந்தியைப் போலவே, உருது லிபியில் எழுதும் இந்துஸ்தானியும் பொதுமொழியாக அங்கீகரிக்கப்படும் என்று தம் காலமெல்லாம் கூறிவந்தார் காந்தியடிகள். ஆனால், தண்டன் குழுவின் எதிர்ப்புக்கஞ்சி நாகரி லிபியில் எழுதப்படும் இந்தியை மட்டுமே பொது மொழியாக்கினர் நேரு அரசாங்கத்தார்.

நமது தேசத்தை இந்தியா என்றழைப்பதில் இழுக்கொன்றும் இல்லை. எனினும், 'பாரத்' என மாற்றுப் பெயர் வழங்கியுள்ளனர் அ. நி. மன்றத்தார்.

ஐக்கிய மாகாணத்திற்கு 'உத்தரப் பிரதேஷ்' என்றும், மத்திய மாகாணத்திற்கு 'மத்திய பிரதேஷ்' என்றும் மாற்றுப்பெயர்கள் வழங்கியதோடு 'விந்திய பிரதேஷ்' 'மத்திய பாரத்' என்பன போன்ற சமஸ்கிருதப் பெயர்களைத் தோற்றுவித்தனர். இவையனைத்தும் நேரு அரசாங்கத்தின் மீது தண்டன் குழுவினர் பெற்ற வெற்றிகளாகும். இந்த வெற்றிகளின் விளைவாகத்தான் திரு. தண்டன் தலைமைப்பீடத்தைக் கைப்பற்ற முடிந்தது. எனவே. இந்தி விஷயத்தில் இனியும் வளைந்து கொடுப்பது, இந்தி மொழி பேசாத மாகாணங்களுக்கு அநீதி செய்வதாகும்.

கலாச்சாரம்

> "இந்தியா முழுவதுக்கும் ஒரு பொதுவான கலாச்சாரத்தை உருவாக்கி வளர்க்க வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தும் வகையில் காங்கிரஸ்காரர்கள் பணி புரிய வேண்டும்."

என்கிறார் தண்டன். இதிலிருந்து இப்போதைய இந்தியாவில் நிலவுவது பல்வேறு கலாச்சாரங்கள் என்பதையும், ஒரே கலாச்சாரம் இன்னும் உருவாகவில்லை என்பதையும் தண்டன் ஒப்புக்கொள்வதாக நம்பலாம்; உண்மையும் அதுதான். இந்தியா முழுவதற்கும் ஒரே கலாச்சாரம் உருவாக முடியுமானால், அதை நாம் மனமார வரவேற்கிறோம். ஏன்? உலகம் முழுவதற்குமே ஒரே கலாச்சாரம் உருவாவதாயினும் நாம் வரவேற்கத் தயார். ஆனால், சிறுபான்மையாயுள்ள தேசிய இனங்களின் கலாச்சாரங்களை அழித்து பெரும்பான்மையோரின் கலாச்சாரத்தைத் திணிப்பது தான் ஒரே கலாச்சாரத் 'தொண்டு' எனத் தண்டன் நம்புவாரானால், அதனால் விளையவிருக்கும் கேடுகள் எண்ணற்றவை என்பதை நினைவூட்டுகிறோம்.

மொழி வழிப்பட்ட பல்வேறு இனங்கள் வாழும் இந்திய உபகண்டத்தில் வெவ்வேறு கலாச்சாரங்கள் இருப்பது இயற்கை. அவற்றால் இந்திய சமுதாயத்திற்குக்கேடொன்றும்நேராது.பொது கலாசாரம் அவசியமென்றாலும், அது இனங்களின் பரஸ்பரக் கூட்டுறவால், விஞ்ஞான வளர்ச்சியால் தானாக உருவாக வேண்டுமேயன்றி அதிகாரத்தாலோ, ஆதிக்க வெறியாலோ உருவாக்கி விட முடியாது. உருவாக்க முயன்றால் உள்நாட்டுக் குழப்பம்தான் விளையும்.

ஆனால், நல்ல வேளையாக நேரு அரசாங்கம் தண்டனின் போக்குக்கு எதிராகவே இருக்கிறது. காங்கிரஸ் தலைவர் தேர்தல் முடிந்தவுடன் பண்டித நேரு விடுத்த அறிக்கைதான் தண்டனின் எதிர்ப்பு வேகத்தைக் குறைத்திருக்கிறது. தமிழ்நாடு காங்கிரசும் தண்டன் போக்கை அங்கீகரியாதென்பதில் நமக்கு நம்பிக்கையுண்டு. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் பிரதிநிதிகளில் மிகப் பெரும்பான்மையோர் தண்டனுக்கு எதிராக வாக்குக் கொடுத்ததே நமது நம்பிக்கைக்குச் சான்றாகும். நாசிக் காங்கிரசில் நிறைவேறியுள்ள தீர்மானங்களும், தண்டன் தலைமையுரைக் கருத்துக்களுக்கு ஆதரவாக இல்லை. ஆகவே, தலைவர் தண்டன், நாசிக் காங்கிரஸ் தீர்மானங்களின் கருத்துகளுக்கு, முரணாகச் செல்லாமல் அவற்றை நடைமுறையில் கொண்டுவந்து காங்கிரசை பலப்படுத்துவாரென நம்புகிறோம்.

மலை மறைந்தது!

தமிழ்ப் பேரறிஞர் சுவாமி வேதாசலம் காலமான செய்தி யறிந்து வருந்துகிறோம். அப்பெரியார் தமிழ் மீது கொண்டிருந்த பற்றுதலால், வடமொழியில் அமைந்திருந்த தமது பெயரை 'மறை மலையடிகள்' எனத் தமிழ் வழிப்படுத்திக் கொண்டார். சுவாமி வேதாசலம், பெயரால் மறைமலை; செயலால் தமிழ் மலை. ஆகவே, 'மறைமலையடிகள் மறைந்தார்.' என்ற செய்தி கேட்டதும், தமிழ் மலை மறைந்து விட்டதாகவே கருதிக் கலங்குகின்றனர் தமிழ்ப் புலவர்கள். அடிகள், வெறும் புலவர் மட்டுமல்ல; சிறந்த ஆராய்ச்சியாளருமாவார். இத்துறையில் அவருக்கிருந்த ஆற்றல் ஈடு இணையற்றது. அவரது ஆராய்ச்சியின் முடிவுகளை அங்கீகரியா தவர்கள் கூட, ஆராய்ச்சித் திறனைக் கண்டு அதிசயித்ததுண்டு.

மறைமலை அடிகள் வைதீகப் போக்குடைய சைவர். ஆனால், ஏனைய வைதீகர்களோடு அவரை ஒப்பு நோக்குமிடத்து, வைதீக வட்டாரத்தில் வாழ்ந்த ஒரு சீர்திருத்தக்காரராகவே திகழ்ந்தார். திருவாசகத்துக்கு உரை எழுதுவதுகூட சிவத்துரோகம் என்று சைவர்கள் எண்ணிய காலம் ஒன்றுண்டு. அந்தக் காலத்தில் திரு வாசகத்துக்கு உரை எழுதத் துணிந்தவர் மறைமலையடிகள். இது போன்ற செயல்களுக்காக அவரை மதவாதிகள் பலர் பழித்தது முண்டு. ஒருபுறம் அவரது காஷாய உடையையும், கடவுள் நெறி யையும் கண்டு மதப்பற்றற்ற "சீர்திருத்த வாதிகள் கையாண்டி செய்தனர். மற்றொருபுறம், அவரது ஆராய்ச்சி முடிவுகளைக் கண்டு பழுத்த சைவர்கள் பழித்துப் பேசினர். என்றாலும், கண்ட னங்களைக் கண்டு கலங்காது தம்கருத்து வழி ஒழுகிவந்தார் மறை மலையடிகள். சைவ சமயத்தைப் பழந்தமிழரின் பண்புக்கேற்ப சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று அடிகள் பலமுறை முயன்ற துண்டு. இதற்கென்றே சென்னை விக்டோரியா மண்டபத்தில் "தமிழர் மத மாநாடு" ஒன்றையும் திரு. வி. க. போன்றவர்களின் உதவியுடன் கூட்டுவித்தார். ஆனால், தங்களைச் சீர்திருத்தவாதி கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் செய்த குழப்பத்தால் அம்மா நாடு பூர்த்தியுறாமல் கலைந்தது.

அடிகளார் தேசியத்துக்கு எதிரானவரல்லர். அதை ஆத ரித்து ஆற்றிய சொற்பொழிவுகள் பலப்பல. ஆயினும் தேசிய அரசாங்கத்தார் மொழித்துறையில் தவறுகள் செய்த போதெல் லாம் அதைக் கண்டித்துப் பேசவும் எழுதவும் அவர் தயங்கிய தில்லை. சமயத்துறையிலும் மொழித்துறையிலும் அடிகளின் கொள் கைகளில் பலவற்றை பெரும்பாலான தமிழர்கள் அங்கீகரித்த தில்லை. சைவ சமயத்தில் அவருக்குள்ள ஆழ்ந்த பற்றுதல் காரண மாக, வைணவம்போன்ற பிற சமயங்களிடம் அவருக்கு வெறுப்பு இருந்தது. வைணவத் தெய்வமாகிய ராமனைக் கதாநாயகனாகக் கொண்ட காரணத்தால், கம்பராமாயணத்தையும் அடிகள் வெறுத்ததுண்டு. இந்த வெறுப்புக்களை தமது நூற்களில் வெளிப் படையாகவே காட்டியுள்ளார். என்றாலும், தமிழ்ப் புலவர்கள்

வீரபாண்டியக் கட்டபொம்மன்

'தேசியவாதி'

o

பதினெட்டாம் நூற்றாண்டில் தான் பிரிட்டிஷார் இந்தியாவில் ஆதிக்கம் கொள்ளலாயினர். **கிழக்கிந்தியக் கம்பெனி** என்ற பெயரால் ஏகாதிபத்திய வெறி பிடித்த வெள்ளையர்கள் இந்தியாவின் பல்வேறு பாகங்களில் முகாம் அடித்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் அவர்கள் தமிழகத்திலும் கூடாரம் போடத் தொடங்கினர்.

அக்காலத் தமிழகத்தில், மூவேந்தர்களின் வல்லரசுகள் முற்றும் மறைந்து விட்டன. இஸ்லாமியப் பேரரசின் இறுதிச் சின்னமாகத் திகழ்ந்த **ஆற்காடு நவாப்**, தென்னாடு முழுவதுக்கும் பேரரசரெனத் திகழ்ந்தார். அவரது மேலதிகாரத்தின் கீழ் தமிழகத்தில் எண்ணற்ற சிற்றரசுகள் இருந்து வந்தன. சிற்றரசுகளின் தலைவர்கள், **பாளையக்காரர்கள்** எனவும் அழைக்கப்பட்டு வந்தனர்.

ஆங்கில 'மார்வாரிகள்'

நாடோடிகளாக வந்த வெள்ளை வணிகர்கள் நாடாளும்

நன்றல்லவற்றை மறந்து நன்றியை மறக்காமல் அப்பெரியாரைப் போற்றி வந்தனர். அடிகள், மக்கள் மத்தியிலிருந்து பணிபுரியாமல் பல்லாவரம் மலையில் மறைந்து வாழ்ந்து வந்தார். இது காரணமாக, பொது மக்கள் அவரது அறிவையும் ஆற்றலையும் அறிவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. என்றாலும், சைவ நெறியுள்ளவரை அந்நெறி வழிப்பட்ட இல்க்கியங்கள் உள்ளவரை மறைமலையடிகளின் புகழ் மறையாதென்பது திண்ணம்.

அடிகள் நூற்றாண்டுகள் வாழ்ந்திருக்க விரும்பினார்; வாழமுடியுமென்றும் நம்பினார். அப்படியே, பிறரும் வாழ்வதற்கு வழிகாட்டியாக 'நூற்றாண்டுகள் வாழ்வது எப்படி?' என்ற நூலையும் இயற்றினார். ஆனால், காலத்தின் வலிமை அவரது கருத்தைப் புறங்கண்டு விட்டது. முக்கால் நூற்றாண்டிலேயே அப்பேரறிஞரின் வாழ்வு முற்றுப் பெற்றுவிட்டது.

அடிகளாரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பேரரசரான நவாப்புக்குக் கடன் கொடுக்கும் 'மார்வாரி'களாகவும் மாறினர். நவாப் பேரரசரென்பதெல்லாம் பெயரளவில்தான்! செயலளவில் சிற்றரசர்களை வற்புறுத்திக் கப்பம் பெறவும் சக்தியற்ற பொம்மைச் 'சக்கரவர்த்தி'யாகவே திகழ்ந்தார். நவாப்பின் பலவீனத்தையும் பாளையக்காரர்களின் அடங்காப் பிடாரித்தனத்தையும் அறிந்த ஆங்கிலேயர்கள் இஸ்லாமியப் பேரரசுக்கு இறுதிச் சடங்கு செய்துவிட்டு, அந்த இடத்தில் இங்கிலீஷ் பேரரசை நிலைநிறுத்தத் திட்டமிட்டனர்.

கொடுங்கோல் தோற்றம்

ஊதாரித்தனமான செலவுகளாலும், பாளையக்காரர்களிடமிருந்து கப்பம் வசூலிக்கக் கையாலாகாத காரணத்தாலும் ஆற்காடு நவாபின் கடன் பளு அதிகரித்து வந்தது. ஆங்கில மார்வாரிகள், "ஒன்று, வட்டியும் முதலுமாகச் சேர்ந்த கடனைக் கொடு; அல்லது பாளையக்காரர்களிடமிருந்து கப்பம் வசூலிக்கும் உரிமையைக் கொடு" என்று நவாபைக் கட்டாயப்படுத்தினர். வேறு வழியின்றி நவாப் தமக்கிருந்த மேலதிகாரத்தைக் கம்பெனி வெள்ளையர்களுக்கு 1892-ல் வழங்கினர்.

நாட்டை அடகு வைத்த நவாபின் செயலால், கண்ணாடியும் சீப்பும் விற்கவந்த வெள்ளையர்களுக்கு மண்ணாசை வெறி தலைக்கேறியது. பாளையக்காரர்களிடம் கப்பப்பணம் வாங்குவதோடு அவர்கள் திருப்தி அடையவில்லை. நிலங்களை அளவு (சர்வே) செய்து வரி விதிக்கவும் துணிந்தனர். பாளையக்காரர்கள் எல்லோருமே தமிழ் மொழியினர்; தமிழ்ப் பண்பினர். என்றாலும், அந்தஸ்து மோகம், அதிகார வெறி காரணமாக அவர்கள் ஒருவருக்கொருவர் பொறாமையும் போர்க்குணமும் கொண்டிருந்தனர். இந்தச் சூழ்நிலையை வெள்ளையர்கள் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டனர். 'செட்டில்மென்ட்' என்ற காரணம் காட்டி ஒரு பாளையக்காரனின் நிலத்தை இன்னொரு பாளையக்காரனுக்கு வழங்கி அவர்களிடையே பகைமையை வளர்த்தனர்.

மரபுக்கொரு மைந்தன்!

சுதந்திரத்தைவிட தங்கள் சுகபோக வாழ்வே பெரிதென எண்ணிய பாளையக்காரர்களில் பெரும்பாலோர் வெள்ளையர்களுக்கு வரி செலுத்தி வாழ இசைந்தனர். அந்தக் கூட்டத்தில், தனது சுகபோக வாழ்வைவிட தாய்நாட்டின் சுதந்திரமே பெரிது எனக் கருதும் வீரன் ஒருவனும் இருந்தான். அவன்தான் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத் தலைவன் **வீரபாண்டியக் கட்டபொம்மன்**. ஆம்; மறவர் குலத்தின் மானத்தைக் காக்க ஒரு மைந்தனைத் தந்தது தமிழகம்.

கம்பெனி வெள்ளையர்கள், **ஜாக்சன்** என்ற கலெக்டரை அனுப்பி கட்டபொம்மனிடம் வரி வசூலிக்க முயன்றனர். பாஞ்சைப் பதியான், பாராளும்

பண்பறியாத பரதேசி ஜாக்ச னுக்கு

"வானம்பொழியுது பூமி விளையுது
மன்னவன் காணிக்கும் கிஸ்தி
யுண்டோ ?"

எனக் கேள்வி விடுத்தான். "தானமெனக் கேளுங்கள், தாராளமாகத் தருகிறேன்; வரி யெனக் கேட்டால் வாள் முனை யில் வசூலித்துக் கொள்ளுங் கள்" என வல்லமை பேசினன். கம்பெனி வெள்ளையர்கள் சாம, பேத, தானம் என்ற சகல தந் திரங்களையும் கையாண்டு பார்த் தனர். கட்டபொம்மனிடம் பலிக்கவில்லை.

எட்டயபுரத்தார் பகைமை

எட்டயாபுரம், அக்காலத் தில் பாஞ்சாலங் குறிச்சியை அடுத்திருந்த ஒரு சிறு பாளைய மாகும். கட்டபொம்மனும் எட்டயாபுரத் தலைவனும் ஒரே கம்பள சாதியைச் சேர்ந்தவர் கள்; ஒத்த வயதினருங்கூட. என்றாலும், வீரபாண்டியனின் புகழையும், போர்வீரத் திறனை யும் கண்டு எட்டயாபுரத் தான் பொறாமை கொண்டிருந் தான். இதன் காரணமாக, இரு பாளையக்காரர்களுக்கும் அடிக் கடி எல்லைச் சண்டைகளும் ஏற் படுவதுண்டு. ஒவ்வொரு சம யத்திலும், வெற்றி வீரபாண் டியனுக்கே கிடைக்கும்.

இவர்களின் விரோதத்தை அறிந்த வெள்ளையர்கள் தங்கள் பிரித்தாளும் தந்திரத்தால் அதைப் பெருக்க முயன்றனர். பாஞ்சாலங் குறிச்சியைச் சேர்ந்த அருங்குளம், சுப்பலாபுரம் என்ற சிற்றூர்களைத் தங்களுக் குள்ள மேலதிகாரத்தைக் கொண்டு எட்டயாபுரத்தோடு இணைத்து விட்டனர். வீர பாண்டியனை ஒழித்துக்கட்ட உதவிபுரிந்தால், அந்த இரண்டு சிற்றூர்கள் மட்டுமல்ல; பாஞ் சாலங் குறிச்சிப் பாளையம் முழு வதையுமே பரிசளிப்பதாக ஆங் கிலேயர்கள் எட்டயாபுரத் தலை வனுக்கு ஆசை காட்டினர்.

போர் துவங்கி விட்டது !

1793-ல் துவங்கிய வீரபாண் டியன் - வெள்ளைக் கம்பெனித் தகராறு ஆறு ஆண்டுகள் கடிதப் போக்குவரத்து மூலம் நீடித்து வந்தது. 1798 ஆகஸ் டில் கலெக்டர் ஜாக்சன் ராம நாதபுரத்தில் முகாம் செய்து கொண்டு சமரசம் பேச விரும்புவதாகக் கடிதம் எழுதி வீரபாண்டியனைப் பேட்டிக் கழைத்தான். பேட்டியின் போது பாஞ்சாலங்குறிச்சித் தலைவனைக் கலெக்டர் அவமதித் துப் பேசியதோடு, தனது படை வீரர்களைக் கொண்டு கைது செய்யவும் முயன்ருன். வீரபாண்டியன் வெள்ளைப் படைகளுடன் வீரப்போர் போர் புரிந்து, தளபதி கிளார்க் என்பவனையும், வீரர் பலரையும் வெட்டி வீழ்த்திப் பாஞ்சைப் பதி திரும்பினன். பாஞ்சாலங் குறிச்சியில் பின்னே நடந்த பெரும்போருக்கு இது ஒத்திகை யாயிற்று.

பின்னர், கட்டபொம்மனும் வெள்ளையர்களும் ஒரு பெரும் போருக்குத் தயாராகி வந்தனர். பரஸ்பரம் கட்சிக்கு ஆள் திரட்

டும் காரியத்திலும் ஈடுபட்டனா. கம்பெனி பக்கம் எட்டயபுரம், சிவகிரி உள்பட பல பாளையக்காரர்கள் 'பணி' புரிந்தனர். கட்டபொம்மனின் 'தேசீய முன்னணி'யில் நாகலாபுரம், சிவகங்கை, கோலார்பட்டு, ஏழாயிரம் பண்ணை ஆகிய பாளையங்களின் தலைவர்கள் தத்தம் படை வீரர்களுடன் அணிவகுத்து நின்றனர். கட்டபொம்மன் தென் பாண்டிநாடு முழுவதும் கம்பெனிக்கு எதிராக ஏககாலத்தில் கிளர்ச்சியைத் துவக்க ஏற்பாடு செய்து வந்தான். விஷயமறிந்த வெள்ளையர்கள், 1799-ம் ஆண்டு செப்டம்பர் 4-ந் தேதி பாஞ்சாலங்குறிச்சியின் மீது படையெடுத்தனர். வீரர்களைப் போல பட்டப்பகலிலல்ல; நரிகளைப்போல நள்ளிரவில்! இந்தப் படையெடுப்புக்குத் தலைமை தாங்கியவன் பெயர், **மேஜர் பானர்மென்**.

கோட்டை வீழ்ந்தது

வெள்ளையர்கள் பீரங்கிகளைக் கொண்டு பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கினர். வீரபாண்டியன், கோட்டைக்குள்ளிருந்த வண்ணமே தன் படை வீரர்களைக் கொண்டு பல மணி நேரம் போர் புரிந்தான். ஆயினும், கோட்டை காப்பாற்றப்படுமென்ற நம்பிக்கை அவனுக்கில்லை. ஆகவே, 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்ற வள்ளுவரின் அறிவுரைக்கிணங்க மெய்க்காவலர்களுடன் வெள்ளையர்கள் அறியா வண்ணம் கோட்டையை விட்டு குதிரை மீதூர்ந்து வெளியேறினன். இந்தப் போரில், **வெள்ளையத் தேவன்** என்ற வீர மறவனும் **லெப்டினெனட் காலின்ஸ்** என்ற ஆங்கிலத் தளபதி கொல்லப் பட்டான். மற்றும் இரு தரப்பிலும் நூற்றுக்கணக்கான வீரர்கள் பலியாயினர். இறுதியில், கோட்டை வெள்ளையர் வசமாயிற்று. கோட்டைக்குள்ளிருந்த வீரபாண்டியன் குடும்பம் முழுவதையும் வெள்ளையர்கள் கைது செய்து காவலில் வைத்தனர்.

தப்பியோடிய வீரபாண்டியன் பல நாட்கள் தலைமறைவாகத் திரிந்தான்; தான் உயிர் வாழ அல்ல, தமிழகத்தின் உரிமையைக் காக்க.

தொண்டைமானின் துரோகம்

ஒருநாள் வீரபாண்டியன், புதுக்கோட்டை மன்னன் தொண்டைமானை அணுகி சுதந்திரப் போரில் அவனும் பங்கு கொள்ள வேண்டுமெனத் தூண்டினன். தொண்டைமான் முன் கூட்டியே வெள்ளையரோடு கள்ள உறவு கொண்டவனுதலால், கட்டபொம்மனின் கருத்துக்கு இசைவது போன்று பாசாங்கு செய்து கம்பெனிப் படைகளிடம் அவனைக் காட்டிக் கொடுத்தான். வீரபாண்டியனும் அவனது தோழர்களும் எண்ணை முழுக்காடி இனிய உணவருந்தி புதுக்கோட்டை மாளிகையின் மேல் மாடியில் உறங்கும்போது, தொண்டைமானின் துணையால் கம்பெனிப் படைகள் அவர்களைக் கைது செய்தன. கைதியான வீரபாண்டியனைக் **கயத்தாறு** கொண்டு வந்த பின் ராணுவக் கோர்ட்டார் மரண தண்டனை விதித்தனர்.

கொன்றனர்; கொளுத்தினர்!

16-10-1799ல், கயத்தாறு சாலையோரத்தில் நின்ற புளிய மரத்தில் தூக்கிலிட்டுக் கொன்ற பின்னர், மறு கணத்திலேயே - அம்மரத்தின் பக்கத்திலேயே - வீரபாண்டியனின் உடலைக் கொளுத்தி சாம்பலாக்கினர்.

வீரபாண்டியன் மாண்ட போது அவனது தம்பி **ஊமைத்துரை** பாளையங்கோட்டைச் சிறையில் அடைபட்டுக் கிடந்தான். அண்ணன் மாண்ட பத்து மாதங்களுக்குப் பிறகு அவன் தனது தோழர்களோடு சிறையை உடைத்து வெளியேறினான். பின்னர், பல மாதங்கள் தென்பாண்டி நாட்டில் அவன் நடத்திய வீரப் புரட்சி பொன் ஏடுகளில் பொறிக்கத் தக்கதாகும்.

பொதுவாக, 1793-ல் துவங்கிய பாஞ்சைப் புரட்சி 1801-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் தேதி ஊமைத்துரையைத் தூக்கிலிட்டுக் கொன்றதோடு முற்றுப் பெற்றது. பின்னர், இந்திய தேசீய காங்கிரஸ் தோன்றும் வரை தட்டிக் கேட்க ஆளின்றி தமிழகத்தில் தனியாட்சி புரிந்தனர் வெள்ளையர்கள்.

முதல் முழக்கம்

வீரபாண்டியன் நடத்திய புரட்சிதான் வெள்ளை ஆட்சிக்கு எதிராக நடந்த முதல் புரட்சியாகும். ஆனால், வரலாற்று ஏடுகளிலே இது மறைக்கப்பட்டு விட்டது. பாஞ்சாலங்குறிச்சிப் புரட்சிக்கு அறுபதாண்டுகளுக்குப் பின்னே நிகழ்ந்த சிப்பாய்ப் புரட்சிதான், இந்திய சுதந்திரப் போரின் முதல் புரட்சியென்று கூறுகின்றனர் அரசியல் வாதிகள். **அசோக் மேத்தா** எழுதியுள்ள "1857" என்ற நூலிலும், **வீர சாவர்க்கர்** எழுதியுள்ள **முதலாவது சுதந்திர யுத்தம்** (எரிமலை) என்ற நூலிலும் சிப்பாய்ப் புரட்சியே இந்திய சுதந்திரத்தின் முதல் புரட்சி என்று சாதிக்கப்படுகிறது. காங்கிரஸ்காரியக் கமிட்டியின் ஆதரவில் டாக்டர் பட்டாபி வெளியிட்டுள்ள '**காங்கிரஸ் சரித்திரம்**' என்ற நூலிலும் இந்தப் பொய் பூரணமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, தமிழ்மக்கள் வீரபாண்டியனுக்கு விழாக் கொண்டாடினால் மட்டும் போதாது. அவ்வீரத்தியாகியின் வரலாறுதான் இந்திய சுதந்திரப் புரட்சியின் முதல் கட்டம் என்பதை வரலாற்று ஏடுகளில் பதிப்பிக்க வேண்டும்.

'புதுக்கோட்டை மான்யுவல்' கால்டுவெல் எழுதியுள்ள 'எட்டயாபுர வரலாறு', 'திருநெல்வேலி சீமைச் சரித்திரம்' போன்ற வரலாற்று நூல்களில் வீரபாண்டியன் , ,கொள்ளைக்காரனாகவும், கொலைக்காரனாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறான். தமிழர் அரிதில் பெற முடியாத ஒரு ஆண்மையாளனை - மன்னர்பதவியைவிட மானமே பெரிதென எண்ணிய ஒரு மறத்தமிழனை - கொள்ளைக்காரனென்றும், கொலைக்காரனென்றும் பழி கூறும் நூல்களை தமிழர் புறக்கணிக்க வேண்டும்; பொசுக்க வேண்டுமென்றும் கூறலாம்.

அண்மையில் வீரபாண்டிய னைப் பற்றி வெளிவந்த வேறு பல நூல்களும் அவனது மாசு மருவற்ற தேசபக்திக்குத் திரையிட்டுவிட்டு தெய்வபக்திக் கும் புரட்சி நடந்த தேதிகளுக் குமே முக்கியத்துவம் அளித் தது.

ஒவ்வொரு தமிழன் இதயத் திலும் வீரபாண்டியனின் உண்மை வரலாறு இடம் பெறு வதாகுக!

'பாரதப் பித்தர்களுக்கு' நேருவின் சாட்டை

இந்தியா என்ற பெயரை 'விசால பாரதம்' என மாற்ற வேண்டும் என்கின்றனர் சிலர். இது முற்றிலும் தேவையற்றது. ஏகாதிபத்திய எண்ணத்தைக் கற்பிப்பது. அதனால்தான் 'இந் தியா' என்ற ஆங்கிலப் பெய ரையே நான் விரும்புகிறேன். அரசியலிலும், சர்வதேசீய தொடர்பிலும் இந்தியா என்ற பெயரே நம் நாட்டைக் குறிக் கும். பிரிவினையால் நமது நாட் டின் பழைய நிலை பாதிக்கப்பட வில்லை. இந்தியாவிலிருந்து பர்மா பிரிக்கப்பட்டபோது, இந்தியாவின் பெயர் மாற்றப் படவில்லை. ஆகவே பாகிஸ்தான் பிரிக்கப்பட்டதால் இந்தியா வின் பெயர் மாற்றப்படத் தேவை இல்லை.

—பண்டித நேரு.

பம்பாயில் ம. பொ. சி.

நாசிக் காங்கிரசில் கலந்து கொள்ளும் பொருட்டு திரு. ம. பொ. சி., செப்டம்பர் 16-ந் தேதி சென்னையிலிருந்து புறப் பட்டு மறுநாள் இரவு நாசிக் போய்ச் சேர்ந்தார். 19-ந் தேதி நடைபெற்ற விஷயாலோசனைக் கமிட்டியில் பார்வையாளராக வும், பின்னர் நடைபெற்ற காங் கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் பிரதிநிதியாகவும் கலந்து கொண்ட பின்னர், 21-ந் தேதி மாலை பம்பாய் சேர்ந்தார். 22-ந் தேதி பம்பாய் தமிழ்ச் சங்கத் தினர் ம. பொ. சி யை வர வேற்று கூட்டம் நடத்தினர். 'மணிக்கொடி' சீனிவாசன் கூட் டத்திற்குத் தலைமை தாங்கி, அர சியல் துறையிலும், இலக்கியத் துறையிலும் ம.பொ.சி. செய்து வரும் சேவைகளைப் பாராட்டிப் பேசினார். பின்னர், திரு. கே.டி. தேவர், ரெ. முருகையன் ஆகி யோரும் ம. பொ. சி. யை வர வேற்றுப் பாராட்டிப் பேசினர். திரு. ம. பொ. சி. தம்மைப் பாராட்டியவர்களுக்கு பதில ளிக்கையில், பம்பாய் தமிழர்கள் தமிழ் நாட்டுக்கு வெளியே வாழ்ந்தாலும் தமிழ் மொழியை மறவாமல் போற்றிவருவது பற்றி மகிழ்வதாகவும், தமிழ் நாட்டின் சிறப்புகளை வடநாட்டு மக்களிடையே பரப்புவதற்கு பம்பாய் தமிழ்ச் சங்கம் படுபட வேண்டுமென்றும் கூறினார்.

அட்டைப் பட விளக்கம்

மன்னனும் மகாத்மாவும்

'முரசு' அட்டைப்படத்தில் காட்சி அளிப்பவன், பாஞ்சாலங் குறிச்சி மன்னன் வீரபாண்டியக் கட்டபொம்மனுவான். வீர பாண்டியன், இந்தியாவை ஆங்கிலேயர் ஆளத்தொடங்கிய காலத் திலேயே அவர்களை எதிர்த்துப் போர் புரிந்து வீரமரணம் எய்தி ஞன். வீரபாண்டியன், காங்கிரஸ் கட்சியான் அல்லன். அது தோன்றுவதற்கு நூறு ஆண்டுகட்குமுன்பே பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்தவன்.

வீரபாண்டியன், காந்தியடிகளின் சீடனும் அல்லன். சுதந் திர உணர்வில் அவன் வரலாறு அடிகளாருக்கு வழிகாட்டியாகும். விடுதலைப் போரைத் துவக்கிவைத்து விட்டுக் கண்மூடினன் வீர பாண்டியன். அப்போரை முடித்துவிட்டுக் கண்மூடினர் காந்தி யடிகள். ஆகவே, அவ்விரு தியாகிகளுடைய வரலாறு, இந்திய விடுதலை வரலாற்றின் துவக்கமும் முடிவுமாகும்.

வீரபாண்டியன் மண்ணுசை வெறியர்களால் கொல்லப்பட் டான். காந்தியடிகள் மதவெறியர்களால் கொல்லப்பட்டார். ஆகவே, அவ்விருவரும் லட்சியத்திற்காக உயிர்விட்ட தியாகிக ளாவர்.

வீரபாண்டியன் நடத்தியது அறப்போரன்று; ஆயுதப்போர். அவன் கருத்தில் அறம் இருந்தது. ஆனல், அவன் கையில் ஆயுத மிருந்தது. காந்தியடிகள் ஆயுதத்தை வெறுத்த அகிம்சைவாதி. இஃது, அவர்கள் வாழ்ந்த காலத்தால், சூழ்நிலையால் தோன்றிய வேறுபாடாகும்.

வீரபாண்டியன் சாதாரணக் குடிமகனல்லன்; நாடாண்ட கோவேந்தன். ஆகவே, அவன் ஆயுதமேந்தி அன்னியரை எதிர்த்தது பிழையன்று; பெருமைப்படக் கூடியதே. ஆனல், காந்தியடிகளோ அரசுரிமை இழந்த அடிமைக் குடிமகனுவார். ஆகவே, அவர் ஆயுதமேந்த உரிமையற்ற மக்களுக்கு அகிம்சை யைப் போதித்தார். மேலும், ஆயுதத்தின் வெற்றி அதன் அள வைப் பொறுத்ததே யொழிய, ஆயுதம் தாங்குவோரின் அறத் தைப் பொறுத்ததன்று. ஆகவே, அடிகளாரின் அகிம்சைக் கொள்கை காலத்திற்கேற்ற கருவியாக இருந்தது.

தென்பாண்டி வீரன் திருநாளையும், தேசத் தந்தை மகாத்மா வின் பிறந்த நாளையும் முன்னிட்டு 'முரசு' விசேஷ இதழாக வெளிவர முடிந்தமைக்கு மகிழ்ச்சியடைகிறோம்.

அறமும் மறமும்

(அரசவைக் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை)

★

தமிழ்மொழி வளர்த்த ஞானம் தரணியில் பரவி எங்கும்
தமிழ்வழி அரசுநீதி தழைத்திட முடியுமானல்
குமிழ்தர உலகைவாட்டும் கொடுமைகள் குறையும், உண்மை;
அமிழ்தினை உண்டாலென்ன அனைவரும் சுகித்து வாழ்வோம்

சிலம்பினைக் காட்டிக்கேட்ட கண்ணகி சீற்றம் கண்டு
குலம்பழி கொண்டதென்றுக் குமுறிய துயரால் நொந்து
நலம்பிழைத் தறத்தைக்கொன்ற நாணத்தால் உயிரைவிட்ட
தலம்புகழ் மன்னன்காதை தமிழுக்கே சொந்தமாகும்

கன்றினை மைந்தன்கொல்லக் கதறின பசுவைப் பார்த்து
'இன்றுனக் குற்றதுன்பம் எனக்குறச் செய்வேன்' என்று
தன்மகன் உயிரைக்கன்றின் உயிருக்கு ஈடாய்த்தந்து
வென்றிகொள் நீதிமன்னன் வேறெந்த மொழியில் உண்டு?

கொண்டவன் அயலூர்போக குலமகள் தனித்த வீட்டை
அண்டினர் கதவைத்தட்டில் கரத்தினை அறுப்போம் என்று
விண்டதை மறந்துசெய்த குற்றத்தால் விதித்தவாறே
தண்டனை தனக்கேதந்த மன்னனும் தமிழனுகும்

திடமிகும் தெய்வபக்தன், தீவிர தேசபக்தன்
கடமையும் தீரவீரக் கருணைசேர் கட்டபொம்மன்
'அடிமையாய் வாழமாட்டேன் அன்னியர்க் கஞ்சேன்' என்று
கொடுமையை எதிர்த்துநின்ற கொள்கையும் தமிழின் கூறும்.

உள்ளமும் உடலும்கூம்ப உலகெலாம் வணங்கும்ஜோதி
வள்ளலக் காந்திசெய்த அறந்தரு வாழ்க்கைமுற்றும்
தள்ளரும் அறங்களாகத் தமிழ்த்திருக் குறளில் முன்பே
வள்ளுவன் வாழ்ந்துசொன்ன கொள்கைவிர் வாய்மையாகும்.

மறத்தொடு மலைத்துநின்றான் மாண்புடை கட்டபொம்மன்
அறத்தொடு சகித்துவென்றான் அற்புதன் காந்திஎம்மான்
திறத்தினை நினைவுகூட்டும் தினங்களின் சிறப்புகூட்டக்
குறித்திடும் பெருமைவாய்ந்த குணத்'தமிழ் முரசு'வாழ்க.

மண்வெறி கொண்டோர்கட்ட பொம்மனைத் தூக்கில் மாய்த்தார்
கண்ணறும் மதப்பேய்கொண்டார் காந்தியை சுட்டுக் கொன்றார்
புண்ணுறும் துயரால்நொந்து புலம்புதல் மடமையாகும்
திண்ணியர் அவர்கள்செய்த தியாகத்தைப் போற்றல் செய்வோம்.

மானங்காத்த பாண்டியன்

—கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை.

★

மீசை முறுக்கிநின்று 'வெள்ளையரே உங்களுக்கோர்
காசும் தரோ'மென்று கர்ஜித்த—கேசரியாம்
பாஞ்சைப் பதிவீர பாண்டியனை நெஞ்சமே
வாஞ்சையொடு பாடுவோம் வா.

வேறு

செந்தில் முருகன் சேவடியைத்
தினமும் நினைந்து தொழுதிடுவோன்
சந்தக் கவிகேட் டுளமகிழ்ந்து
தாளம் வாரி அளித்திடுவோன்
வந்த பொல்லா வெள்ளையரை
மதியா வீர பாண்டியனைச்
சிந்தை மறவா தோவியத்தில்
யில் கண்டு போற்றுவமே,
தஞ்ச மென்று வந்த
தாங்கும் இனிய குணசீலன்
பஞ்ச மறியாப் பழம்பதியாம்
பாஞ்சைப் பதியில் அரசாண்ட
விஞ்சு புகழ்சேர் வீராதி
வீரன் கட்டப் பொம்மன்பேர்
நெஞ்சில் எழுதி வைத்தன்பால்
நித்தம் நித்தம் போற்றுவமே.

'தானம் வேண்டில் தருகின்றேம்
தருமம் வேண்டில் தருகின்றேம்
வானம் இடிந்து வீழ்ந்திடினும்
வரிதந் துன்னை வணங்கே'மென்
றேனை வெள்ளைக் கம்பனியர்க்
கெடுத்துக் கூறித் தென்னாட்டின்
மானங் காத்த பாண்டியனை
மறவா தென்றும் போற்றுவமே.

சீமை வெள்ளைக் காரர்படை
சிதறி ஓட முறியடித்தோன்
ஊமைத் துரையென் றுலகுபுகழ்
ஒப்பில் விஜயன் முன்வந்த
வீமன் வீர பாண்டியனின்
வெற்றி முரசு முழக்கியிந்தப்
பூமி மீதெந் நாளுமவன்
புகழைப் பாடிப் போற்றுவமே.

காய்ந்து போரில் வெள்ளையரைக்
கறங்கச் செய்த ஆண்சிங்கம்
கங் ஆய்ந்து வினைகள் செய்து நிதம்
இன
தன்மக அறங்கள் காத்த அறிவுடையோன்
வென்றுபாய்ந்து நாயை முயல்விரட்டும்
பாஞ்சை ஆண்ட பாண்டியனுக்
கொண்டவ ந்த புகழை இனியதமிழ்
அண்டினார் கந்
விண்டதை மறந்சையிற் பாடிப் போற்றுவமே.

மண்ணை வாங்கி அரசாளும்
ஈன வாழ்வை உள்ளத்தில்
எள்ளத்தனையும் எண்ணுதோன்
ஊன உடலை வெறுத்துதறி
உலகில் அழியாப் புகழ்நாட்டி
வானம் சென்ற வீரனைநாம்
மறவா தென்றும் போற்றுவமே.

கட்டப் பொம்மன் சீமையிலே
காகம் பறவா தெனுமாறு
சட்ட திட்டம் செய்துகுடி
தாங்கி நின்ற ஜகவீரன்
* துட்டர் அஞ்சும் துரைராஜன்
துணிந்த வீரன் என்றுலகில்
எட்டுத் திசையும் புகழ்பெற்றோன்
எங்கள் வீர பாண்டியனே.

(பாடபேதம்)

துட்டர் கண்டன் சூராதி
சூரன் என்றிவ் வுலகெங்கும்
பட்டம் பெற்ற பாண்டியனைப்
பாடிப் பாடிப் போற்றுவமே.

கெஞ்சி வாழும் வாழ்க்கையினைக்
கிஞ்சித் தேனும் விரும்பாத
செஞ்சி யாண்ட தேசிங்கத்
திறலோ னனைய போர்வீரன்
வஞ்சர் இழைத்த தீவினையால்
மாண்ட கட்டப் பொம்மன்பேர்
விஞ்சும் ஆண்மை பெறுதற்கு
வீரர் போற்றும் மந்திரமே.

அன்ன சாலை அமைத்திடுவோம்
ஆலயங்கள் கட்டிடுவோம்
பன்னற் கரிய கலைகளெலாம்
பயிலக் கழகம் கண்டிடுவோம்
தென்னர் போற்றும் பாஞ்சையினைத்
திருத்தி அளகை யாக்கிடுவோம்
மன்னர் வீர பாண்டியன்பேர்
வையத் தென்றும் வழங்கிடவே.

அஞ்சினவர்க் கென்றும் அபயம் அளித்திடுவோன்
வஞ்சகர்க்கு வாழ்வு மறுத்திடுவோன்—விஞ்சுபுகழ்
தென்னாட்டுப் பாஞ்சைத் திறல்வீர பாண்டியனின்
நல்நாமம் போற்றுவோம் நாம்.

கருத்தோவியம்

சிப்பாய் ஒருவன் துப்பாக்கியைப் போற்றுவது போலவும், இசைக் கலைஞன் வீணையைப் போற்றுவது போலவும் பெண் தன் கணவனைப் போற்றுகிறாள்.

—பெர்னாட்ஷா.

உண்மையான ஞானி யார்? ஐயோ! காலம் பறந்து போய்க் கொண்டிருக்கிறதே என்று உணர்கிறவன்தான்.

—தாந்தே.

தினந்தினமும் தீமையையே இழைத்து வரும் ஒரு பெரிய கூட்டத்திற்குத் தலைவனாக இருப்பதைக் காட்டிலும், உண்மைக்காக ஒருவனாகவே கற்பாறைபோல் நிற்பதே சிறப்புள்ளதாகும்.

—ஒரு அறிஞர்.

அடிகள் போற்றிய தியாகிகள்

★

[காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் அறப்போர் நடத்திய பொழுது அங்கு குடியேறியிருந்த தமிழர்கள் அப்போரின் முன்னணிப்படை எனத் திகழ்ந்தனர். பலர் உயிர்த் தியாகமும் புரிந்தனர். அறப்போர் வெற்றி பெற்று அண்ணல் காந்தி இந்தியா திரும்புமுன் தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் ஒரு பிரிவுபசாரம் நடத்தினர். அப்போது தமிழினத்தவரின் தியாக புத்தியை மெச்சி அடிகள் நிகழ்த்திய பேருரையை கீழே தந்திருக்கிறோம்.—ஆசிரியர்.]

ஜோகன்னஸ்பர்க், எனது உணர்வோடு கலந்த - அவ்வுணர்விலிருந்து பிரிக்க முடியாத ஒரு சிறந்த நகரமாகும். தென்னாப்பிரிக்க இந்தியர்கள் நடத்திய உரிமைப் போரில் உயிர்ப் பலியான **வள்ளியம்மை**யைத் தந்தது ஜோகன்னஸ்பர்க் தான். தமிழர்களாகிய உங்கள் மத்தியில் நான் பேசும்போது அந்த இளஞ்சிறுமியின் உருவம் என் கண்முன்னே காட்சியளிக்கிறது. அந்த வீரச்சிறுமி, உண்மைக்காக தனது உயிரையே தியாகம் செய்து விட்டாள். தான் செய்வது என்ன என்பதைக் கூட புரிந்து கொள்ள ஆற்றலற்ற இளம்பெண் வள்ளியம்மை. ஒத்துழையாமையின் தன்மையை, அதனால் மக்கள் சமுதாயத்திற்கு நேரவிருக்கும் நன்மையைத் தெரிந்து கொண்டவள் அல்லள். ஆனால், மக்களின் நலன்களைக் காக்கத்தான் போராடுகிறோம் என்பதை அவள் தெள்ளத்தெளிய உணர்ந்திருந்தாள். அந்த உணர்ச்சியால் அவள் எல்லையற்ற உற்சாகம் கொண்டு சிறைச்சாலை புகுந்தாள். சிறையாட்சியின் கொடுமையால் எலும்பும் தோலுமாக வெளி வந்து சில நாட்களிலேயே உயிர்நீத்தாள் அந்த வீராங்கனை.

வள்ளியம்மை, ஜோகன்னஸ்பர்க் தந்த தியாகிகளில் இறுதியானவள் அல்லள்; அந்தத் தியாகிகளின் திருக்கூட்டத்திலே முதன்மையானவள். **நாகப்பன், நாராயணசாமி** என்ற பதின்மூன்றே வயதுடைய இளஞ்சிறுவர்கள் வள்ளியம்மையைப் பின்பற்றி உரிமைப் போரில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் புரிந்தனர். நானும் எனது மனைவி (கஸ்தூரிபா)யும் உங்கள் எதிரில் இருக்கிறோம்; உங்களால் அடிக்கடி பாராட்டப் பட்டு விளம்பரமும் பெறுகிறோம். ஆனால் வள்ளியம்மை, நாராயணசாமி, நாகப்பன் போன்று வெளியுலகத்துக்கு அறிமுகமாகாத பல தமிழர்கள் செய்துள்ள தியாகம் மகத்தானது. தாங்கள் என்ன செய்கிறார்கள், எதற்காகச் செய்கிறார்கள் என்பதைக் கூடப் புரிந்து கொள்ள ஆற்றலற்ற இளம்பருவத்தினர்கள். ஆயினும், தங்கள் செயல் சரியானது; அறத்திற்கு ஒத்தது என்பதில் அவர்களுக்குத் தளராத நம்பிக்கை இருந்தது.

நான் தமிழர்களைக் காணுந்தோறும் ரத்தக் கலப்புடைய

எனது சொந்த உறவினர்களைக் காண்பது போன்ற உணர்ச்சியை அடைகின்றேன். இதற்கான காரணங்கள் நீங்கள் எல்லோரும் அறிந்தவைதான். தென்னாப்பிரிக்க இந்தியர்களின் உரிமைப்போரில் பல்வேறு இனத்தினரும் பங்குகொண்டனர். ஆயினும், தமிழ் இனத்தவர்தான் அந்தப் போராட்டத்தில் பெரும் தியாகங்களைச் செய்திருக்கின்றனர். சத்தியாகிரக இயக்கத்தில் ஈடுபட்டு உயிர் நீத்தவர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையோர் தமிழர்களேயாவர். இன்று காலைகூட நாம் இடுகாட்டிற்குச் சென்று, இருபெரும் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திவிட்டு வந்தோம். அவ்விருவரும் தமிழர்களேயாவர். அவர்களில் நாராயணசாமியும் ஒருவராவார். தமிழ் நாட்டினரான அவரது எலும்புகள் அந்நாட்டிற்கு மிகத் தொலைதூரத்திலுள்ள தென்னாப்பிரிக்கக் கடலில் கலந்துவிட்டது.

தென்னாப்பிரிக்க சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதற்காக நாடு கடத்தப் பட்டவர்களிலும் பெரும்பாலோர் தமிழர்கள்.

ஒருமுறை சிறைபுகுந்து வெளிவந்த பின்னரும், அல்லல்களையெல்லாம் அலட்சியம் செய்து, மீண்டும் மீண்டும் போராட்டத்தில் பங்கு கொண்டு பன்முறை சிறை புகுந்தவர்களில் பிற இனத்தவரை விட தமிழ் இனத்தவர்களே அதிகம்.

போராட்டத்தால், சாதாரண வணிகர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். அவர்களிலும், தமிழ் வணிகர்களே பெரும்பாலோர் ஆவர்.

டால்ஸ்டாய் பண்ணையில் சத்தியாகிரகத்தின் முன்னணியிலிருந்தவர்களிலும் பெரும்பாலோர் தமிழர்களே.

எந்தத் துறையிலும் தமிழர்கள்தான் இந்திய சமுதாயத்தின் உன்னதமான லட்சியங்களைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். நான் உங்களைப் புகழ வேண்டும் என்பதற்காக எதையும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. தமிழ் மக்களிடமுள்ள எல்லையற்ற கடவுள் நம்பிக்கை, உண்மையில் உறுதி ஆகியவைதான் பல ஆண்டுகளாகத் தென்னாப்பிரிக்காவில் தொடர்ந்து நடைபெற்ற ஒத்துழையாமைக் கிளர்ச்சிக்கு அச்சாணிகளாக அமைந்திருந்தன.

சிறைச்சாலை சென்ற இந்தியப் பெண்மணிகளிலும் தமிழ்ப் பெண்களே அதிகம்.

ஊர் ஊராக, வீடு வீடாகச் சென்று அதிகார வர்க்கத்தை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்யும்படி ஆண்களைத் தூண்டிய வீராங்கனைகள் யாவர்? மீண்டும் சொல்கிறேன்; தமிழ்ச் சகோதரிகளே யாவர்.

பெண்களின் கோரிக்கைப்படி வேலை நிறுத்தம் செய்தவர்களிலும் தமிழர்களே அதிகமானவர்கள்.

சோதனைக் காலத்தில் ஒரு துண்டு ரொட்டியும், ஒரு

அவுன்சு சாக்கரையும் பெற்று திருப்தியோடு தளராது இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் யார்? அவர்களும் தமிழர்களேயாவர்..

தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் தமிழ் இனத்தவரேயன்றி, வங்காளிகளும் ஈடுபட்டார்கள் என்பது உண்மையே. ஆனால், அவர்கள் தமிழர்களைப் போல அவ்வளவு சிறப்பாகவும், தொடர்ச்சியாகவும், உறுதியாகவும் போராடவில்லை. எட்டு ஆண்டுகள் தொடர்ந்து நடந்த போராட்டத்தில் துவக்கமுதல் இறுதிவரை தொடர்ச்சியாகவும், உறுதியாகவும் போராடியவர்கள் தமிழர்களே யாவர்.

ஜோகன்னஸ்பர்க்கையே எடுத்துக் கொள்வோம்: இங்குள்ள இந்தியர்களில், விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய அளவுக்கு தமிழர்கள் சிறுபான்மையினராக இருக்கின்றனர். என்றாலும், கடுஞ்சிறை புகுந்து கஷ்டப்பட்டவர்களின் எண்ணிக்கையில் தமிழர்களின் தொகைதான் அதிகம். ஒருவர் விடாமல் கூட்டம் கூட்டமாக சிறைச்சாலை புகவேண்டுமென்று நான் கோரியபோதும் தமிழர்கள்தான் அதை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்தார்கள்.

இவைதான் தமிழர்களிடையே வசிக்கும்போது ரத்தக் கலப்புடைய உறவினர் மத்தியில் வசிப்பது போன்ற உணர்ச்சியை நான் அடைவதற்கான காரணங்கள்.

தமிழர்கள் தன்னலங் கருதாதவர்கள்; சேவைக்குப் பின் வாங்காத சிந்தையுடையவர்கள்: எளிமையான வாழ்க்கையும், அஞ்சாத நெஞ்சமும், அறிவுத் தெளிவும் பெற்றவர்கள்; கொள்கைக்காக வாழ்க்கையையே பலி கொடுக்கும் தியாக சீலர்கள்.

உங்கள் தாய் மொழியாகிய தமிழிலேயே உங்களுடன் பேசிப் பழக வேண்டும் என்ற ஆர்வம் எனக்குண்டு. என்றாலும், தமிழில் பேசும் ஆற்றல் அற்றவனாக இருக்கின்றேன். அப்படியிருந்தும், நீங்கள் என்னோடு இயக்கத்தில் பங்கு கொண்டு தயக்கமின்றிப் போராடினீர்கள். நான் தமிழர்கள் மத்தியில் வாழ்ந்த காலம் முழுவதும் ஒரு பெரிய விழுமிய அனுபவத்தை அடைந்தேன். இதை நான் என்றென்றும் மறக்கமாட்டேன்.

தென்னாப்பிரிக்க அரசினரோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்திற்கு காரணஸ்தர்கள் நீங்கள்தான். உங்களுடைய சளியாத உழைப்பாலும், தியாகத்தாலுந்தான் ஒப்பந்தம் உருவாகியது; இயக்கமும் வெற்றி பெற்றது.

மனச்சாட்சி வழியே கிடைக்கும் வெற்றிகளாலன்றி, வேறு வழிகளில் நீங்கள் வெற்றின் பலனை எதிர்பார்க்க மாட்டீர்கள்.

நீங்கள் கேட்டவுனில் நியாயமும் உரிமைக்காகப் போராடினீர்கள். அதைப் பெற்றீர்கள்.

சட்டங்களை நேர்மையும் நீதியுமான முறையில் அமுல்

செய்ய வேண்டுமென்று போராடினீர்கள். அதையும் அடைந்தீர்கள்.

சட்டங்களில் படிந்துள்ள நிற வேறுபாடுகளை நீக்கப் போராடினீர்கள். அதிலும் வெற்றி பெற்றீர்கள்.

மூன்று பவுன் தலைவரி கொடுக்க மறுத்தீர்கள்; அதிலும் வெற்றி உங்களுக்கே.

உண்மைக்காகப் போராடினீர்கள். உண்மை வெற்றி பெற்றது. உண்மையை அழிக்க முடியாது. வெற்றி கொள்ளவும் முடியாது.

உங்களுக்கு இன்னொன்று சொல்ல வேண்டும். எல்லா இனத்தவரிடமும் உள்ளது போல உங்களிடமும் சில குறைபாடுகள் உள. உங்களுக்குள் சிறு சிறு பூசல்கள் இருந்து வரக் காண்கிறேன். நல்ல வேளையாக அந்தப் பூசல்களைப் போராட்டத் துறையில் நீங்கள் பாராட்டவில்லை. ஆனால், உங்களுடைய அன்றாட வாழ்வில் அந்தப் பூசல்கள் மோதுகின்றன. நீங்கள் இந்தச் சிறிய பூசல்களை விட்டொழித்து அதை உயர்ந்த லட்சியங்களுக்காக வாழ்வீர்களாக! உங்களுடைய ஒழுங்க உணர்வு இதற்குத் துணைபுரியுமென்று நம்புகிறேன். தாய் நாட்டு மக்களுக்காக உயிரையும் தியாகம் செய்யத் துணிந்த உங்களுக்கு இந்தச் சிறிய பூசல்களை விட்டொழிப்பதில் கஷ்டமிருக்காது என்பதை நான் அறிவேன்.

எனக்குச் சென்னையைப் பற்றித் தெரியும். அங்குள்ள சாதி வேற்றுமைக் கொடுமைகளைப்பற்றியும் அறிவேன். ஆனால், கடல் கடந்து தென்னாப்பிரிக்காவுக்கு வந்த பிறகும் தமிழர்கள் தங்கள் சாதிவேறுபாடுகளை விட்டொழிக்கவில்லையென்றால், அது வருந்தத்தக்கது. சாதி வேறுபாடுகள் ஒரு காலத்தில் நன்மையைத் தந்திருக்கலாம். ஆனால் இப்போது அது தீமையைத் தருகிறது. சாதி வேறுபாடுகளை மிகைப்படுத்தி மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிப்பது அழிவுக்கு அடிகோலுவதாகும். உங்களில் யாரும் உயர்ந்தாருமில்லை; தாழ்ந்தாருமில்லை.

நீங்கள் எல்லோரும் ஓரினம்—தமிழ் இனம். நாம் எல்லோரும் ஓர் குலம்—இந்தியர் குலம்.

★

21—4—1915 அன்று சென்னை விக்டோரியா மண்டபத்தில் காந்தியடிகளுக்கு வரவேற்பு அளித்தபொழுது அடிகளார் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் வருமாறு :—

எனக்கே இவ்விதப் புகழுரை சாற்றுவீர்களானால், நம் தாய் நாட்டிற்காக தென் ஆப்பிரிக்க மண்ணில் தம் இன்னுயிரை அர்ப்பணித்த அந்த மாபெரும் தியாகிகளுக்கு எவ்விதப் புகழ் மாலை சூட்டுவீர்கள்? தாய் நாட்டின் மானத்தைப் பாது காத்த சகலவிதமான தொ[illegible]களுக்குள்ளான பதிவே[illegible]

லது பதினெட்டு வயதுள்ள நாகப்பன், நாராயணசாமி போன்ற வாலிபச் சிங்கங்களுக்கு எவ்விதப் புகழ்மாலை சாற்றுவீர்கள்? (கரகோஷம்) எலும்புந் தோலுமாக பாரிட்ஸ் பார்க் சிறையிலிருந்து விடுதலையாகி ஜெயில் வாழ்வினலுண்டான கடுஞ்சுரத்தினல் பீடிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர் அந்நோய்க்கே இரையான அந்தப் பதினேழு வயதுள்ள வள்ளியம்மையின் மேல் எவ்விதப் புகழ்மாலை சூட்டுவீர்கள்?

மற்றெல்லா இந்தியர்களையும் விட சென்னை வாசிகளைத்தான் (தமிழர்களை) இவ்விதக் கொடுமைகளுக்கு இரையாக்க நம்மை ஆளுந் தேவதைகள் பொறுக்கி எடுத்தனர். ஜோகன்னஸ்பர்க் என்ற பெரும் நகரத்தில் ஒரு தமிழர் மற்றொரு தமிழரை எவ்விதக் கண்கொண்டு பார்க்கிருர் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆப்பிரிக்காவிலுள்ள உங்கள தேசத்து மக்கள் சென்ற எட்டாண்டுகளாக அனுபவித்து வரும் கொடிய நெருக்கடியின் காலத்தில் ஒரு தமிழர் ஜெயிலுக்கு ஒருமுறை அல்லது இருமுறை சென்று வராவிட்டால் அவரை மற்ற தமிழர்கள் மிகக் கேவலமாக மதிக்கிருர்கள் என்பது உங்களுக்குக தெரியுமா? இவ்வுன்னத வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் நான் உற்சாக மூட்டினேன் என்கிறீர்கள்! நான் இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

தாங்கள் செய்த சேவைக்கு எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் உழைத்த அந்தச் சாதாரண மக்கள்தான் எனக்கு உற்சாக மூட்டினர். நான் எந்த அளவு முன் வர வேண்டுமோ அந்த அளவு என்னை முன்னுக்குக் கொண்டு வந்தனர். அவர்களது தியாகத்தாலும், கொள்கையிலும் கடவுள் மேலும் கொண்ட நம்பிக்கையாலும் எனக்கு உணர்ச்சி ஊட்டி எனது பணியை சரிவர ஆற்றும்படி செய்தனர். (கரகோஷம்.) யாவரும் புகழும் விதத்தில் எனது வாழ்க்கைத் துணைவியும் யானும் பணியாற்றுவதும் நாங்கள் ஆற்றிய இச்சிறு தொண்டை நீங்கள் மிகைப் படுத்திக் கூறுவதும் எனது துர் அதிர்ஷ்டமென்றே எண்ணுகிறேன். (இல்லை... இல்லை என்று கூச்சல்.) அன்புடைய நண்பர்களே, யான் சொல்வதை நம்புங்கள். உங்களைப் போன்ற சாதாரண மனிதர்களாகிய நாங்கள் இந்தியாவிலோ அன்றி தென் ஆப்ரிக்காவிலோ உங்கள் உதவியின்றி, நாங்கள் செய்யத் தயாராக இருந்ததை நீங்களும் செய்யாமல் பல காரியங்களை சாதித்திருக்கிறோம் என்று நினைத்தால் அது நம் அனைவருக்கும் பெருந் தீங்கைத் தான் விளைவிக்கும். நாம் இது காறுஞ் செய்த சேவைகள் அனைத்தும் வீணாகும். இத்தனைக்கும் காரணம் நான்தான் என்று சொல்வதை நான் ஒரு நாளும் ஏற்க முடியாது. எனக்கு உற்சாகமூட்டியது அவர்கள்; அந்த மாபெருந் தியாகிகள். கவர்னர்கள் என்று சொல்லிக் கொண்ட அதிகார சக்திகளுக்கும், விடுதலை கோரிய மக்களுக்குமிடையே மொழிபெயர்ப்

சீர்திருத்தச் செம்மல் காந்தி

—'ஞானம்'

★

உலகில் தோன்றிய சீர்திருத்த வாதிகள் பலர். 'ஐரோப்பாவின் நோயாளி' என பழிக்கப்பட்ட துருக்கிக்கு புத்துயிர் அளித்தார் கமால் அத்தாதுர்க்.

அமெரிக்க நாட்டு அடிமையினங்களுக்கு விடுதலை தந்தார் பிரசிடெண்ட் லிங்கன்.

இந்தியாவில் தோன்றிய சீர்திருத்த வாதிகளும் எண்ணிலர். பெண்ணினத்தைச் சீரழித்து வந்த உடன்கட்டை யேறும் கொடுமையை ஒழித்தார் ராஜாராம் மோகனர்.

மதவெறி பிடித்தலையும் மூடர்களுக்கு எதிராக எம்மதமும் சம்மதமெனக் கொள்ளும் சன்மார்க்க மதத்தைத் தோற்றுவித்தார் ராமலிங்க வள்ளலார்.

இப்படி, வாழையடி வாழையாக உலகம் சீர்திருத்தவாதிகள் பலரைப் பெற்று வந்திருக்கிறது. இந்தச் சீர்திருத்தவாதிகளின் வரிசையிலே மிகச் சிறப்புற்று விளங்கியவர் காந்தியடிகளே யாவர். அடிகளார்க்கு முன் தோன்றிய சீர்திருத்த வாதிகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில்தான் சிறப்புற்று விளங்கினர். சமயத் துறையில் மட்டுமே சீர்திருத்தங் கண்டனர் சிலர். அரசியல் துறையில் பணியாற்றினர் மற்றும் சிலர். சமூகத் துறையில் தொண்டு புரிந்தனர் பின்னும் சிலர். கல்வித் துறையில் மட்டுமே முனைந்திருந்தனர் வேறு சிலர். ஆனால், காந்தியடிகளோ, இந்தத் துறை, அந்தத் துறை என்றில்லாமல் அரசியல், சமயம், சமூகம், கல்வி ஆகிய எல்லாத் துறைகளிலும் ஏககாலத்தில் ஈடுபட்டுப் பணியாற்றினார். வடக்கே மதவெறி பிடித்த மக்களின் மத்தியில் மகாத்மா தோன்றினார். ஆகவே, சமயத் துறையில் அடிகளாரின் தொண்டு, தென்னாட்டைவிட வடநாட்டுக்கே அதிகமாகத் தேவை இருந்தது. இந்துக்களை ஏசிப் பேசுபவன்தான் இஸ்லாமிய ரட்சகனென்று முஸ்லிம்கள் எண்ணுவதும், முஸ்லிம்களுக்கு எதிராக இந்துக்களுக்கு வெறியூட்டுபவன்தான் இந்துஸ்தானத்தின் தலைவனென்று மக்கள் எண்ணுவதும் வடக்கே வழக்கமாகி விட்டது. இன்று, நேற்றல்ல; எத்தனையோ நூற்றாண்டுகளாக

பாளர்கள் போன்றவர்கள்தான் நாங்கள். எனது தாய் தந்தையர் அளித்த எனது கல்வி இப்பாமர மக்களின் தேவைகளைப் பிரதிபலிக்க உதவுகின்றது. நிலைமையை உணர்ந்து தியாகஞ் செய்ய முன்வந்தவர்கள் அவர்கள். தங்களது பணியைச் சரிவரச் செய்து முடித்து அதற்கென்றே தங்களது இன்னுயிரை அர்ப்பணித்த அவர்கள் நம் அனைவர்க்கும் நம் கடமையை நிறைவேற்றுவதில் உற்சாக மளிக்கட்டும்.

இந்த வழக்கம் நிலைத்து விட்டது. இந்த மூடநம்பிக்கைக்கு முடிவு கட்டும் பொறுப்பை காந்தியடிகள் தன்னந்தனியராக மேற்கொண்டார். இந்து-முஸ்லிம் எக் ஹோ! (இந்து-முஸ்லிம்களே, ஒன்றுபடுங்கள்) என்று அடிகள் கோஷித்த மந்திரம் இந்து-முஸ்லிம் ஆகிய இருதரப்பினருக்கும் பகைமை என்னும் காட்டாற்றைக் கடக்கும் பாலமாக அமைந்தது. காந்தியடிகளின் கருத்துக்கு மாறாக இந்தியா இரு கூறாகப் பிரிக்கப்பட்டது: ஏன்? அடிகளையும் கொலை புரிந்தனர் மதவெறியர்கள். ஆனால், 'இந்து-முஸ்லிம் ஏக் ஹோ!' என்ற மந்திரத்தின் சக்தி அழிக்கப்படவில்லை. அடிகளின் ஆவி பிரிந்த மறு கணத்திலேயே இந்தியாவில் மதவேற்றுமை மறைந்தது. ஆம்; மரணத்திலும் வெற்றி கண்டார், மகாத்மா.

*

சமயச் சனிக்கர்கள் திட்டமிட்டுச் செய்து வைத்த சதி தான் தீண்டாமை. மனிதனை மனிதன் பார்த்தாலும் பாவம்; தொட்டாலும் தோஷம் என்னும் மடத்தனத்தின் உச்சியிலேறி விளையாடினர் மதப்பித்தர்கள். இந்தக் கொடுமையிலிருந்து ஆறு கோடி மக்களை விடுவிப்பதற்கு 'எல்லோரும் ஓர் குலம்' எனக் குரல் கொடுத்தார் காந்தியடிகள். தீண்டாத மக்களை பாவப் பிறவிகள் என்றனர், பழிக்கஞ்சாப் பாதகர்கள். இதை மறுத்து அவர்கள் தான் கடவுளின் புதல்வர்கள் (ஹரிஜனங்கள்) என்று வாதாடினார், காந்தியடிகள். காந்தியடிகளுக்கு முன்னேயும் தீண்டாமையைப் போக்க பலர் முயன்றதுண்டு. அவர்களில் சிறப்பு வாய்ந்தவர் ராமனுஜர். ஆனால், ராமானுஜர் தமது காலத்திலேயே வெற்றியடையக் கொடுத்து வைக்கவில்லை. அவரது வாழ்வு கோர முடிவை எய்தியது. ஆனால் ராமானுஜர் காணமுடியாத வெற்றியை காந்தியடிகள் தமது காலத்திலேயே கண்டார்.

சமூகத்தின் எந்தத் துறையிலும் தீண்டாமைக்கு இடமில்லை என்று தீர்ப்பளித்து விட்டனர், அரசியல் நிர்ணய மன்றத்தார். அமெரிக்க பிரசிடெண்ட் லிங்கன்கூட அரசாங்க பீடத்திலேறிய பிறகுதான் அடிமை இனங்களுக்கு விடுதலை தந்தார். ஆனால், அதிகார வர்க்கத்துக்கு எதிராக இருந்த நிலையிலேயே தீண்டாத மக்களுக்கு உரிமை தேடித் தந்தார் காந்தியடிகள். தமது ஆசிரமத்தில் வளர்ந்த ஹரிஜனப் பெண்ணொருத்தியை அந்தணருக்கு மணம் செய்வித்தார் அடிகளார். நாலு வருணத்தில், மேல் வருணத்தவரான அந்தணர், நாலு வருணத்திற்கும் அப்பாற்பட்ட பஞ்சமப் பெண்ணை மணப்பதென்பது நெஞ்சாலும் நினைக்க முடியாத காரியம். இந்த அற்புதத்தை செய்யும் சக்தி அடிகளார்க்கு இருந்தது. இத்தகைய கலப்புத் திருமணங்கள் ஆசிரமத்தில் மட்டுமல்லாமல், ஆசிரமத்திற்கு வெளியேயும் நடந்தவை கணக்கில.

அடிகளார் மூடநம்பிக்கையை அங்கீகரிக்கவில்லை. வரதட்சிணை என்ற பெயரால்

பணக் கொள்ளையடிக்கும் செயலை காந்தியடிகள் சமயம் வாய்த்த போதெல்லாம் கண்டித்திருக்கிறார். தேவதாசி முறையை எதிர்த்து அடிகளார் ஆற்றிய சொற்பொழிவுகள் அளவில. தமது பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளும் பலப்பல. சீர்திருத்த உபதேசங்கள் எல்லாம் ஊருக்கே ஒழிய தனக்கல்ல என எண்ணும் சீர்திருத்த வாதிகள் எத்தனையோ பேர் உண்டு. ஆனால் காந்தியடிகளோ அந்தப் பொய்யர்களின் போக்குக்குப் புறம்பானவர். வடநாட்டு வைசிய குலத்தைச் சேர்ந்த தமது மகன் தென்னாட்டு அந்தணப் பெண்ணை மணப்பதற்கு ஆதரவு தந்தார் அடிகளார். தேவதாஸ்-லட்சுமியின் திருமணச் செய்தியை அறியாதார் யார்? இது கலப்புத் திருமணம். ஒருவகையில்லல; மாகாணக் கலப்பு, வருணக் கலப்பு, சாதிக் கலப்பு, மொழிக் கலப்பு ஆகிய பல் வேறு வகையில் கலப்புடையது.

காந்தியடிகள் அல்லா, இயேசு, ராமன், சிவன், புத்தன், அருகன் என பல்வேறு தெய்வங்களை வழிபடும் வெவ்வேறு மதத்தினரிடமும் அன்பு செலுத்துபவர். என்றாலும், ஆண்டவன் ஒருவரே என்பதில் அவர் அசைக்க முடியாத நம்பிக்கை வாய்ந்தவர். நாமம் பல வாயினும் அங்கு இங்கு எனாத படி எங்கும் நடமாடும் தெய்வம் ஒன்றுதான் என்ற உண்மையைத் தெளிந்தவர். தமது பிரார்த்தனை மேடையில் பைபிளைப் படிக்கச் சொல்லிக் கேட்பார். ராமநாமத்தைப் பாராயணம் செய்வார். குரானை ஓதி அல்லாவைக் கும்பிடுவார். ஆம்; நம்பிக்கையில் மட்டும் ஏக தெய்வவாதியல்ல; நடைமுறையிலும் அப்படித்தான்.

காந்தியடிகள் சின்னங்களை வெறுத்த சீர்திருத்தவாதியாவார். இளமை முதல் தரித்து வந்த பூணூலை இடைக்காலத்தில் அறுத்தெறிந்தார் அடிகளார். நெற்றியில் நாமம் போடும் வழக்கத்தையும் வெறுத்தொதுக்கினார். அர்ச்சகருக்கு தட்சிணை கொடுக்கும் வழக்கத்தை காந்தியடிகள் அங்கீகரித்ததில்லை. சத்திய சோதனை என்ற அவரது வரலாற்றை ஆராய்ந்தால் இவற்றிற்கான சான்றுகள் நிறைய உண்டு.

தமிழகத்தில் சீர்திருத்தப் 'புரட்சி'யாளர்கள் புற்றீசல்கள் போலப் புறப்பட்டு வருகின்றனர். இவர்கள் சமூகத்தில் படிந்த சீர்கேடுகளைக் கூறுவதில் புரட்சிக்காரர்களே யொழிய அதைப் போக்குவதில் புரட்சிக்காரர்களல்லர். சீர்கேடுகளை சித்தரிப்பவன் சீர்திருத்த வாதியல்லன்; சீர்கேடுகளைப் போக்கி சமூகத்தைச் சீர்திருத்துபவனே சீர்திருத்தவாதி. காந்தியடிகள் ஒவ்வொன்றிலும் தம்மைச் சீர்திருத்திக் கொண்ட பிறகே பிறரைச் சீர்திருத்த முயன்றார். தாம் நம்புகின்ற ஒன்றைத்தான் பிறரையும் நம்பும்படி தூண்டினார். உடை, உணவு, உள்ளம் ஆகிய எல்லாவற்றிலும் தம்மைத் திருத்திக் கொண்ட பிறகே உலகத்தைத் திருத்தும் பணியில் ஈடுபட்டார். சீர்திருத்த

மென்பது சொல்லிக் காட்டுவது மட்டுமன்று. சொல்லியபடி செய்து காட்டுவதுமாகும் என்பதற்கு அடிகளாரின் வரலாறே எடுத்துக் காட்டாகும்.

காந்தியடிகள், அரசியல் துறையில் செய்த சீர்திருத்தங்கள் அளவில. வீரமென்பதன் பொருள் கொலை என்று முடிந்துவிட்ட நிலையிலே—மனித வர்க்கத்தைக் கொன்று குவிப்பதுதான் மண்ணுள்வோரின் நெறி என்று நிச்சயிக்கப்பட்டு விட்ட காலத்திலே காந்தியடிகள் தோன்றினார். அரசியல் எந்தக் காலத்தில் தோன்றியதோ அப்போது முதலே அது பலாத்காரத்தோடு பிரிக்கமுடியாதபடி பின்னிக் கிடக்கிறது. நமது இலக்கியங்கள், இதிகாசங்கள் எதிலும் ஆயுதமற்ற ஓர் அரசியல் போராட்டத்தை நாம் காண முடியவில்லை. போராட்டமின்றி மனித சமுதாயம் வாழ முடியும் என்ற செய்தியைக்கூட இலக்கியங்களும், இதிகாசங்களும் நமது சிந்தனைக்குக் கொண்டு வரவில்லை. கவிதைகளிலாகட்டும், கதைகளிலாகட்டும், நெஞ்சையள்ளும் காவியங்களிலாகட்டும்; நாம் காண்பதென்ன? போராட்டம், போராட்டம், போராட்டம்!

அண்ணன் தம்பிகளுக்கு ஐந்தடி நிலங்கூடக் கொடுக்க மறுத்ததின் விளைவுதான் பாரதப் போர்.

தங்க மதில் சூழ்ந்த இலங்கையை இழந்தாலும் இழப்பேனேயன்றி என் கைவசப் பட்ட மங்கையை விடுவிக்க மாட்டேன் என்ற பிடிவாதத்தின் விளைவுதான் ராம-ராவண யுத்தம்.

கடவுளர்களே மண்ணுலகில் மனிதர்களாக அவதரித்து மக்களைக் கொன்று குவிக்கும் போர்களுக்குத் தலைமை தாங்கியதாக இலக்கியங்கள் கூறுகின்றன.

அறத்திற்கு மாறுபட்ட மறம் தான் அரசியலின் அச்சாணி என்றாகிவிட்ட நிலையில் காந்தியடிகள் தோன்றினர். மனித வர்க்கம் போரின்றி வாழ முடியும் என்ற புதுமையான செய்தியை அவர் மூலம்தான் உலகம் முதன் முதலாக அறிந்தது. அநீதியை எதிர்க்கப் போர் அவசியமானாலும்கூட அதற்கு ஆயுதம் அவசியமில்லை. அன்பு வழி ஒன்றே போதும் என்பதைச் சொல்லாலும் செயலாலும் உணர்த்தினர் காந்தியடிகள். ஆயுதப் போரைவிட அறப் போரின் வலிமையே அதிகமென்பதை பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராகத் தாம் நடத்திய பெரும் போரில் உணர்த்திவிட்டார் காந்தியடிகள். காந்தியடிகள் போரை விரும்பாதவர். என்றாலும் போர் நேர்ந்து விட்டால் புறமுதுகிடாமல் முன்னேறும் போர் வீரராவர்.

அண்ணல் காந்தி லட்சியத்தில் வளைந்து கொடுக்காத போராட்டவாதி. ஆனால், அவசிய மேற்பட்டபோது நடைமுறையில் வளைந்து கொடுத்து லட்சியத்தில் வெற்றி காணும்

ராஜதந்திரி. காந்தியடிகள் காலம்வரை மேல் நாட்டு அரசியல் முறைதான் கீழ் நாட்டு அரசியலுக்கு வழிகாட்டியாக இருந்தது. ஆனால், அடிகளார் நடத்திய அறப்போரின் முடிவால் மேல் நாட்டுக்கு வழி காட்டும் பெருமையை கீழ்நாடு அடைந்து விட்டது. மேல் நாட்டு அரசியல் முறைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட முறையை காந்தியடிகள் கடைப்பிடித்தார்.

பகைவன் புறமுதுகிட்ட போது அவனையும் அவனுக்குத் துணையிருந்த சக்திகளையும் பூண்டோடு அழிப்பது மேநாட்டவரின் முறை. ஆனால், காந்தியடிகளின் போர்முறை இதிலிருந்து மாறுபட்டது. பகைமையை அழித்து, பகைவனை நட்புக் கொள்வதுதான் காந்தியடிகளின் போர்முறை

பகை நட்பாக் கொண்
டொழுகும் பண்புடையாளன்
தகைமைக்கீழ் தங்கிற்றுலகு

என்ற வள்ளுவர் குறளும் இதையே வலியுறுத்துகின்றது. பகைவனின் சங்கடத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு வெற்றி காண்பது மேல் நாட்டார் யுத்த தந்திரம். பகைவன் சங்கடத்தில் சிக்கிய போது விட்டுக் கொடுத்தும் உதவி புரிந்தும் அவன் மனமாற்றம் அடைவதற்குச் சந்தர்ப்பம் தருவது காந்திய நெறி.

இன்றைய உலகம் எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தம் வேண்டுகிறது. இந்தியாவும் அப் படித்தான். ஆனால், வெண்ணை திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்தது போல், விடுதலை பெற்ற இந்தியா சமூக சீர்திருத்தத்தில் வேகமாக முன்னேற வேண்டிய தருணத்தில் அடிகளாரை இழந்து விட்டோம். ஆயினும், சீர்திருத்தம் வேண்டும் செம்மல்களுக்கு அடிகளாரின் வரலாறு நல்ல வழிகாட்டியாகும். காந்தியடிகளுக்குமுன் தோன்றிய சீர்திருத்தவாதிகள் நல்லதைச் செய்ய முனைந்த வேகத்திலே சிற்சில கெடுதல்களையும் செய்துவிட்டனர். ஒரு மதத்தை சீர்திருத்த விரும்பி மற்றொரு புது மதத்தை தோற்றுவித்த பெரியார்கள் பலர். ஆனால், காந்தியடிகளோ இந்து மதத்தைச் சீர்திருத்த விரும்பினரே யொழிய மற்றொரு புது மதத்தை தோற்றுவித்தாரில்லை. புதியதொரு வேதநூலை வெளியிட்டாரில்லை. ஆகவே உலக சீர்திருத்தவாதிகளின் வரிசையிலே, காந்தியடிகள் ஒப்பற்ற ஒருவராய் விளங்குகின்றார்.

வாழ்க, காந்தியடிகள் திருநாமம்!

கருத்தோவியம்

இயந்திரம் என்பதற்காகவே நான் இயந்திரத்தை வெறுக்கவில்லை. அவற்றின் மீது மக்கள் கொண்டுள்ள மோகத்தையே வெறுக்கிறேன். இயந்திரங்களையெல்லாம் ஒழித்து விடுவது என் நோக்கமல்ல; அவற்றைக் கட்டுப்படுத்துவதே எனது நோக்கம். —காந்தியடிகள்.

திருப்பத்தூர் தமிழரசுக்

கடந்த 10—9—50 அன்று, திருப்பத்தூர் (வ. ஆ.) தமிழரசுக் கழக முதலாவது மாநாடு திருப்பத்தூர் புதிய தியேட்டரில் சிறப்பாக நடைபெற்றது.

சென்னையினின்று தலைவர்கள் ம. பொ. சி., தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், கா. மு. ஷெரீப், நாஞ்சில் மணி, கு. சா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் 9—9—50 அன்று திருப்பத்தூர் வந்து சேர்ந்தனர். ரயிலடியில் மாநாட்டு வரவேற்புக் குழுவினர் தலைவர்களுக்கு மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

ஊர்வலம்

10—9—50 காலை 10 மணிக்கு மாநாட்டு நடவடிக்கைகள் ஆரம்பமாயின. தலைவர்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து மாநாடு நடைபெறும் புதிய தியேட்டருக்கு தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். 'கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. வாயில்' வழியாக மேளதாளம் முழங்க, தமிழரசு ஒலிகள் எழ, தமிழரசுக் கொடிகளுடன் ஊர்வலம் நடைபெற்றது.

உள்ளூரிலிருந்தும், சென்னை, சேலம், தென்னாற்காடு, செங்கல்பட்டு, சித்தூர் போன்ற வெளி ஜில்லாக்களிலிருந்தும் ஏராளமான மக்கள் ஆர்வத்துடன் வந்து மாநாட்டில் குழுமியிருந்தனர்.

திருவிதாங்கூர் தமிழரசுக் கழகத் தோழர் திரு. நாஞ்சில் மணி தமிழரசுக் கழகக் கொடியை ஏற்றுவித்தார். அவர் பேசுகையில், தமிழரசுக் கொடியைப் பற்றியும், அக்கொடியில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்களின் தத்துவத்தைப் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்து, திருவிதாங்கூர் தமிழகம் தமிழ்த் தாயகத்துடன் சேரவேண்டும் என்ற லட்சியத்துடன் அங்குள்ள தமிழ் மக்கள் போராடி வருகின்றனர் என்றும், அந்த லட்சியத்திற்கு மாறுபட்ட தீய சக்தி எதையும் எதிர்த்தொழிக்க அங்குள்ள தமிழ் மக்கள் கொஞ்சங்கூடப் பின்வாங்கப் போவதில்லை யென்றும், தமிழ் நாட்டின் தெற்கெல்லையில் பிரிந்து கிடக்கும் தமிழகத்தையும், வடக்கெல்லையில் தமிழர்கள் வாழும் பகுதியையும் தமிழ் நாட்டுடன் ஒன்று சேர்த்து புதிய தமிழகமும், அத்தமிழகத்தில் சோஷியலிசக் குடியரசும் அமைப்பதே தமிழரசுக் கழகத்தின் லட்சியம் என்றும் குறிப்பிட்டார்.

திரு. மீனாட்சிசுந்தரனார் முழக்கம்

பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் மாநாட்டைத் திறந்து வைத்து அரியதோர் சொற்பொழிவாற்றினார். அவர் உரையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாடு இன்று தாழ்ந்த நிலையில் இருக்கிறது. தமிழ் இனமும் தமிழ் மொழியும் சீர் குலைந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் இந்தி மொழி கட்டாயம்; ஆனால் தமிழ்மொழி கற்பது கட்டாயமில்லை என்ற வேதனை

கழக முதலாவது மாநாடு

தரும் உத்தரவையும் கண்டுவிட்டோம். இது தமிழ் இனத்துக்கே இழிவு தரும் நிகழ்ச்சி. இந்தியாவுக்கு சுதந்திரம் வந்துவிட்டது. ஆனால் தமிழர்களுக்கு மட்டும் இன்னும் உரிமை கிடைக்கவில்லை. தமிழ்நாட்டில் தமிழ்க் கலைகள் வளரவும், தொழில்கள் பெருகவும், நல்வாழ்வு பெறவும் தமிழரசு வேண்டும். தமிழ்நாட்டின் தலைவிதியை தமிழர்களே நிர்ணயித்துக் கொள்ள உரிமை வேண்டும். தமிழரசு ஏற்பட்டால்தான் தமிழ் மக்களுக்கு ஏற்ற சட்ட திட்டங்கள் வகுத்துக் கொள்ள முடியும். தமிழ்நாட்டுக் கேற்ற சட்டதிட்டங்கள் ஏற்பட்டால்தான் தமிழ்நாடு செழிக்க முடியும். இந்தியாவை மொழிவாரி நாடுகளாகப் பிரிக்க வேண்டுமென்பது காங்கிரஸ் கொண்டிருந்த லட்சியம் தான். இன்று அந்த லட்சியம் நடைமுறையில் நிறைவேற்றப் படவில்லை. இந்தியாவை மொழி வாரி நாடுகளாகப் பிரித்து அந்நாடுகளுக்கு சுயநிர்ணய உரிமை அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டுக்கு அந்த உரிமை வேண்டும் என்றே தமிழரசுக் கழகம் போராடுகிறது. தமிழ்நாடு தலைநிமிரவேண்டுமானால், தமிழ்மக்கள் வாழவேண்டுமானால் தமிழரசு அமைய வேண்டும். ஒவ்வொரு தமிழனின் இதயத்திலும் "தமிழரசு" என்ற எண்ணம் வளர வேண்டும்."

அடுத்தபடியாக வரவேற்புக் குழு செயலாளர் திரு. மு. வேணுகோபால், திரு. கா. மு. ஷெரீபு அவர்களை மாநாட்டுக்குத் தலைமை வகித்து சிறப்புற நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அதை ஆமோதித்து திரு. ம. பொ. சி. பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" தமிழ்நாடு சாதி அறியாது. சமய நெறி அறியும்; ஆனால் வெறி அறியாது. கம்பன் பிறந்து கவிபாடிய தமிழ்நாட்டில் வெறிக்குக் கட்டுக்காவலுண்டு. உலகுக்கே வாழ்க்கை நெறியைப் புகட்டிய வள்ளுவனைப் பெற்றெடுத்து பெருமை பெற்ற இத்தமிழ் நாட்டில் வெறிக்கு இடமே இல்லை. தமிழ் நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் பெருமை தரும் - நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார இலக்கியத்தைச் சமைத்து, பௌத்த மதக் கோவலனையும், சமண மதக் கண்ணகியையும், தம்பதிகளாக்கிய இளங்கோவடிகள் வாழ்ந்த இந்தத் தீந்தமிழ் நாட்டில் சமய வெறிக்கு இடமே இல்லை. சமய வெறி தமிழர்களின் மண்டையில் தாக்கியதுண்டு. ஆனால், மூளையை ஒருபோதும் தாக்கியதில்லை. "தமிழர் யார்?" என்று கேட்பவர்களுக்கு, அறிவுறுத்திக்காட்டவே ஒரு முஸ்லிமாகிய திரு. கா. மு. ஷெரீபு இம்மாநாட்டுத் தலைவராக விளங்குகிறார். தமிழ் நாட்டில் பிறந்து, தமிழ்மொழி பேசி தமிழ்ப் பண்போடு தமிழ்நாட்டில் வாழும் அனைவரும் தமிழர்கள்தான். தமிழரசுக் கழகத்துக்கு மத வேறுபாடு, சாதி வேறுபாடு கிடையாது. தமிழ் பேசி,

தமிழகத்தில் வாழ்வோர் அனைவரும் ஒரே இனம். அந்த இன மக்களின் நல்வாழ்வே தமிழரசுக் கழகத்தின் லட்சியம். வ.உ.சி. சென்ற பாதையில் தான் இன்று தமிழரசுப்படை செல்கிறது. வேங்கடத்துக்கு வடக்கே அகிம்சா மூர்த்தியான காந்தி மகானைக் கொல்லும் அளவுக்கு மதவெறி தாண்டவமாடிய போதிலும், தமிழ்நாட்டில் அந்த வெறிக்குக் கொஞ்சங்கூட இடமளிக்கக்கூடாது.''

பலத்த கரகோஷத்துக் கிடையே திரு. கா. மு. ஷெரீப் தலைமைப் பீடத்தில் அமர்ந்தார்.

வரவேற்புரை

அடுத்தபடியாக வரவேற்புக் குழுத் தலைவர் திரு. கு. சு. கந்தசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் குறிப்பிட்டதாவது :

தமிழரசுக் கழகத் தோழர்களே! தமிழ்ப் பெருமக்களே! வணக்கம். இம்மாநாடு, உரிமையற்றிருக்கும் நமக்கு அவ்வுரிமையைப் பெறுவதற்கான உணர்ச்சியை ஊட்டுவதாகுக! தமிழர்களாகிய நாம், இந்தியா விடுதலை பெற்ற மறு கணத்திலேயே தமிழகத்தில் தனியரசு அமையுமென நம்பினோம்; நம்பியபடி நடக்கவில்லை. தமிழர் அறிவிலோ, ஆளும் திறமையிலோ வேறெந்த இனத்தவருக்கும் பின் வாங்கியவரல்லர். ஆகவே, நமது அறிவிலும், ஆளும் திறமையிலும் நம்பிக்கைக் கொண்டு அரசுரிமை பெறப் போராடுவோமாக! தமிழகத்தில் தமிழரசு அமைந்தால் தான் தமிழ் மக்கள் தமிழ்ப் பண்பாட்டைச் சுவைக்க முடியும்; தன் மானத்துடன் வாழவும் முடியும்.

தமிழகத்தின் எல்லைகள் எவை என்பதில் யாருக்கும் ஐயமிருக்கத் தேவையில்லை. ''தமிழகத்தின் எல்லைகள் எது?'' என்று கேட்பவர்கள் உண்டானால், நெஞ்சை நிமிர்த்திச் சொல்லுகிறோம்; குமரி முதல் திருவேங்கடம் வரை உள்ள நிலம் முழுவதும் எங்கள் தாய்த் திருநாடு என்று. இப்படிக் கூறுவது குறுகிய நோக்கமல்ல; உண்மையை-உரிமையை வலியுறுத்துவதாகும். குமரியும் வேங்கடமும் தமிழகத்தின் எல்லைகளே என்பதை எந்த வகையிலும் நிரூபிக்கலாம். இலக்கிய உண்மைகளும், சரித்திரச் சான்றுகளும் காட்டலாம். ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்'' என்றார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பனம்பாரனார். ஜனநாயக முறைப்படித்தான் நாம் நமது எல்லைகளை அடைய முயலுகிறோம்.

பனம்பாரனார் காலம் முதல் பாரதியார் காலம் வரை அமைந்திருந்த அந்த எல்லைகள் இன்று எங்கே? குமரி முனையை மலையாள ஆட்சி கொள்ளை கொண்டது. வேங்கட மலையை வெள்ளையராட்சி ஆந்திரத்தோடு இணைத்துவிட்டது. இந்த அநியாயக் கொள்ளைகளை நியாயமாக்கி விடப் பார்க்கின்றனர்

ஆதிக்கவாதிகள். இது நமது ஆண்மைக்கு விட்ட அறை கூவல். என்றாலும், அமைதியுடன் சொல்லிப் பார்க்கிறோம். தமிழ் நிலத்தில் ஒரு அங்குலத்தைக் கூட பிறர் அபகரிக்கவிட மாட்டோம்; இதுவே, தன் மானமுள்ள ஒவ்வொரு தமிழனின் சபதமாகும். நமது உடைமையையும், உரிமையையும் பறிக்க நினைப்போரை எதிர்க்கும் உரமான நெஞ்சம் தமிழருக்கு உண்டு. ஆங்கிலேயர்களின் சுரண்டலால் தமிழகம் வளமிழந்த பாலைவனமாகி விட்டது. இனியும் இந்தியர் என்ற பெயரால் பிற இனத்தவர் சுரண்டுவதை அனுமதிக்க மாட்டோம்.

இமயத்தில் தமிழ்க்கொடி நட்ட இமயவரம்பன் பரம்பரை நாம்; கங்கை வரை அரசாண்ட கங்கை கொண்ட சோழன் வழி வந்தோர் நாம்; என்றெல்லாம் பெருமை பேசுகிறோம். இன்று வேண்டுவது இமயத்தில் கொடி நாட்டிய பெருமையல்ல. வேங்கடத்தை மீட்கின்ற திறமையேயாம். நமது வேந்தர்கள் செய்தது போல ஜாவா, மலேயா, பர்மா சென்று ஆட்சி புரிய வேண்டாம். அண்மையிலே-பார்வைக்குளட்டிய தூரத்திலே திருவிதாங்கூர், மைசூர், யாழ்ப்பாணத்தில் காய்ந்த மனத்தோடு நைந்த சிந்தையோடு கண்கலங்கி நிற்கும் நமது சொந்த சகோதரர்களை நம்மோடு சேர்த்துக் கொண்டு ஒரு ஐக்கிய தமிழகத்தை அமைக்க ஆர்வம் கொள்ளவேண்டும். அதற்கு இம்மாநாடு வழி காட்டுமாக!

எங்கள் அழைப்பிற்கிணங்கி இங்கே குழுமியுள்ள அறிஞர்களையும், தமிழர்களையும் மனமார வரவேற்கிறேன்.

தலைமையுரை

மாநாட்டுத் தலைவர் திரு. கா. மு. ஷெரீப் நிகழ்த்திய தலைமையுரை வருமாறு :—

தமிழ் முஸ்லிமாகிய எனக்கு இத்தமிழரசுக் கழக மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் பெருமையை அளித்திருக்கிறீர்கள். தமிழகத்தில் வாழும் முஸ்லிம் - நாட்டால், மொழியால், பண்பால்-அசல் தமிழன்தான். இதை யாரும் மறுக்கமுடியாது. மறுப்பவர்கள் ஒன்று பைத்தியக்காரர்களாக இருக்கவேண்டும்; அல்லது தகிடுதத்த நிபுணர்களாக இருக்க வேண்டும். என்னை ஒரு தமிழன் என்று அழைத்துக் கொள்வதில்தான் நான் பெருமை கொள்கிறேன். தமிழகத்தையே தாயகமாகக் கொண்டுவிட்ட யாரும் தமிழ் மக்கள் என்பதில் விவாதத்திற்கே இடமில்லை. பரம்பரையாகத் தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் தமிழ்ப் பண்பினர்களாகிய முஸ்லிம் மக்கள் தமிழர்கள் தான். இதில் ஐயப்பாடெதுவும் கிடையாது.

இந்திய நாடு சுதந்திரமடைந்து விட்டது. ஆனால், தமிழ் இனமக்களுக்கு இன்னும் உரிமை கிடைக்கவில்லை. அந்த உரிமை வேண்டும் என்பதற்காகவே, அன்று நடைபெற்ற சுதந்திரப் போரிலே தமிழர்களாகிய நாம் தீவிரப் பங்கு கொண்டோம். அன்னியனை நாட்டைவிட்டு வெளியேற்ற

நடைபெற்ற விடுதலைப்போராட்டத்தில் இந்தியாவிலுள்ள எல்லா இனமக்களும் தீவிர பங்கு கொண்டனர். அந்த சுதந்தரப் போர்க்களத்தில் போராடிய தளபதிகள்தான் இன்று இனவாரி அரசுரிமை கேட்கின்றனர். தமிழகத்துக்குத் தனியரசு பெறவே தமிழரசுக் கழகம் போராடுகிறது.

தமிழ் நாடு வாழ, தமிழ் மக்கள் வாழ, தமிழ்க் கலைகள் செழிக்க, தமிழ் நாட்டுத் தொழில்கள் வளர்ந்து பெருக, தமிழ் மொழி தழைக்க தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும். தங்கள் அரசியலைத் தாங்களே வகுத்துக்கொள்ள உரிமை வேண்டும். அந்த உரிமை இன்று தமிழ் நாட்டுக்கு இல்லை. அந்த உரிமையை - உலகத்திலுள்ள ஒவ்வொரு இனத்தவருக்கும் இருக்கக் கூடிய பிறப்புரிமையைப் பெறவே தமிழரசுக் கழகம் போராடுகின்றது.

இனவாரி உரிமை என்பது குறுகிய நோக்கமல்ல; தேசியத்திற்கு விரோதமானது மல்ல. ஒரு இனத்தவர், இன்னொரு இனத்தவரைச் சுரண்டுவதும், அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துவதும் கூடாது என்பதா குறுகிய நோக்கம்? இந்தியாவிலுள்ள மொழிவழி நாடுகள் யாவும் தனித் தனியாகப் பிரிக்கப்படவேண்டும். அந்தந்த நாட்டு அரசியலை அவர்களே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அந்த இனவாரி - மொழிவாரி நாடுகளின் கூட்டரசாகத் தான் இந்தியா விளங்க வேண்டும். அதுவே பலம் பொருந்திய-வல்லமை மிக்க இந்தியாவாக விளங்கும். தமிழர்களின் தலைவிதியை பிற இனத்தவர்கள் நிர்ணயிப்பதை நாங்கள் விரும்பவில்லை. அப்படி விரும்புவது தற்கொலைக் கொப்பாகும். வேங்கடத்துக்கு வடக்கேயுள்ளவர்களிடம் உறவுகொள்ளத் தயார். அந்த உறவு இருக்கத்தான் வேண்டும். அதற்காக உரிமையை விட்டுவிடத் தயாராக இல்லை. அந்த உரிமை வேண்டியே தமிழரசுக் கழகம் போராடுகிறது. தமிழரசுக்கழகவாதிகள் இன்று நேற்று முளைத்தவர்கள் அல்ல. அன்று நாடு விடுதலை பெற முன்னணியில் நின்று போராடிய தளபதிகள் தான் - உடல், பொருள், ஆவி அத்தனையையும் பணயம் வைத்துப் போராடிய வீரர்கள்தான் இன்று தமிழ் நாட்டின் உரிமைக்காகப் போராடுகின்றனர்.

தமிழ்நாட்டின் அரசியல் தமிழ் மக்களால்தான் வகுக்கப்படவேண்டும். தமிழ்நாட்டின் தொழில்கள் தமிழ் மக்களால் தான் வளர்க்கப்பட வேண்டும். தமிழகத்தில், பிற மொழிக்குரிய தகுதியை தமிழர்கள்தான் நிர்ணயிக்க வேண்டும். ஒரு இனத்தவரின் நலன்களை இன்னொரு இனத்தவர் 'நிர்ணயிப்பது' என்பது ஒப்புக்கொள்ள முடியாத செயல். தமிழ் இனத்துக்குரிய உரிமைகளைப் பெறவே தமிழரசுக் கழகம் பாடுபடுகிறது.''

தலைமையுரையுடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மாநாடு பகல் உணவுக்காகக் கலைந்தது.

மீண்டும் மாலை 3 மணிக்கு மாநாடு துவங்கியது.

படத்திறப்புக்கள்

வீரபாண்டியக் கட்டபொம்மன் படத்தை கள்ளக்குறிச்சி திரு. கி. ஜனார்த்தனமும், பாரதியார் படத்தை திரு. நா. சஞ்சீவியும், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. படத்தை, தமிழ்நாட்டு வடக்கெல்லைக் காவலர் ஆசிரியர் மங்கலக்கிழாரும், திருப்பூர் குமரன் படத்தை தங்கவயல் அருள்தாசும் திறந்து வைத்து அந்த வீரர்கள் நடத்திய போராட்டத்தைக் குறித்து விரிவாக சொற்பொழி வாற்றினர். மாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன :—

தீர்மானங்கள்

1. ஆந்திரர்கள் முட்டுக்கட்டையிட்டதன் காரணமாக சென்னை மாகாணத்தை மொழிவாரி நாடுகளாகப் பிரிப்பதை இந்திய அரசாங்கத்தார் தள்ளிப் போட்டிருப்பதைக் குறித்து இம்மாநாடு தனது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அடுத்துவரும் பொதுத் தேர்தலுக்குள் தமிழகத்தைத் தனி ஸ்டேட்டாகச் செய்ய வேண்டுமென்று இம்மாநாடு மேலிடத்து ஆட்சியாளரை வற்புறுத்துகிறது.

2. சென்னை மாகாணத்தில், சிறப்பாக தமிழகத்தில் பயங்கரமான உணவுப் பஞ்சம் நிலவி வருவதைக் கண்டு இம்மாநாடு கவலைப்படுகிறது. பர்மா போன்ற வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை நேரிடையாக இறக்குமதி செய்யும் உரிமையை மாகாண அரசினருக்கு உடனடியாக வழங்குவதன் மூலம் பஞ்சத்தைத் தவிர்க்க வழி செய்யுமாறு மத்திய அரசினரை வற்புறுத்துகிறது.

3. இலங்கையில் வாழும் பல லட்சக்கணக்கான தமிழர்களுக்கு இலங்கை அரசினர் பிரஜா உரிமையை வழங்க மறுத்து வரும் நேர்மையற்ற செயலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. பிரஜா உரிமையின் பொருட்டு இலங்கைத் தமிழர் நடத்திவரும் கிளர்ச்சியை இம்மாநாடு மனப்பூர்வமாக ஆதரிக்கிறது.

4. இந்தியாவில் ஒரு அரசுக் குட்பட்டுள்ள இன்னொரு அரசின் திட்டுப் பிரதேசங்களை மாற்றிக் கொள்ளும் திட்டப்படி சென்னை மாகாணத் தமிழகத்தோடு சேர்ந்திருந்த அஞ்சங்கோ, தங்கச்சேரி ஆகிய மலையாளப் பிரதேசங்களை திருவிதாங்கூர் அரசோடு சேர்த்து விட்ட மத்திய ஆட்சியினர், திருவிதாங்கூர் அரசில் உள்ள செங்கோட்டை, கொச்சின் - சித்தூர் ஆகிய தமிழ்ப் பகுதிகளை சென்னை மாகாணத்தோடு சேர்க்கத் தவறியதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் அந்தப் பிரதேசங்களை உடனடியாக தமிழகத்தோடு சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சென்னை அரசினரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

5. சித்தூர் ஜில்லா போர்டு பள்ளிகளில் நடைபெற்று வந்த தமிழ் வகுப்புக்களை ஜில்லா

போர்டு தலைவர் ரத்து செய்த செயலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், மேற்படி வகுப்புக்கள் நடைபெற்றே தீரவேண்டுமென்று சென்னை அரசினர் விடுத்திருந்த ஆணையைச் சரிவர அமுல் நடத்தாதிருப்பதை இம்மாநாடு சென்னை கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறது.

6. புதுவை, காரைக்கால், ஆகிய பிரஞ்சுத் தமிழ்ப் பிரதேசங்களை உடனடியாக இந்திய தமிழகத்தோடு சேர்க்கப்படுவதற்கான நேரிடை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மேலிடத்து அரசினரை இம்மாநாடு வற்புறுத்துவதுடன் அந்தப் பிரதேசங்களில் ஓட்டு எடுக்க வேண்டுமென்ற அநீதியான - தமிழ் மக்களின் சுதந்திர உணர்ச்சியை அவமதிப்பதான பிரஞ்சுப் பேரரசின் திட்டத்தை இம்மாநாடு எதிர்க்கிறது.

7. திருவிதாங்கூர் தமிழகத்தில் ஐந்தாண்டுகளாக நடைபெறும் தேசீய இனப் போராட்டத்தை இம்மாநாடு வரவேற்பதுடன், 'திருவிதாங்கூர் - கொச்சி ஐக்கிய சமஸ்தானத்தினுள் அடங்கியுள்ள தமிழ்த் தாலுக்காக்களை தமிழ் நாட்டு எல்லைப் பரப்போடு சேர்க்குமாறு மத்திய அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

8. வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்திரவு, பிற்போக்கு வகுப்புக்களின் கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானதென்று இம்மாநாடு கருதுகிறது. அந்த உத்தரவைப் பற்றிச் சென்னை உயர்நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பின்மீது மத்திய நீதி மன்றத்திற்கு சென்னை அரசாங்கம் அப்பீல் செய்துள்ளதை இம்மாநாடு வரவேற்கிறது.

9. பண்டங்களின் விலைவாசி உயர்வைக் குறைக்க அண்மையில் மத்திய அரசினர் பிறப்பித்துள்ள அவசரச் சட்டத்தை இம்மாநாடு வரவேற்பதுடன் அதைத் தீவிரமாக அமுல் நடத்தும்படி சென்னை அரசினரை வற்புறுத்துகிறது.

பின்னர் திரு. ம. பொ. சி. தற்கால அரசியல் நிலைபற்றியும், தமிழரசுக் கழகத்தின் லட்சியங்களைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர். (அச்சொற்பொழிவின் சுருக்கம் பிறிதோரிடத்தில் காண்க.)

திரு. மாரியப்பா இசைவிருந்து

இரவு 8 மணிக்கு இசையுலக இளம்பரிதி திரு. எம். எம். மாரியப்பாவின் இன்னிசையரங்கு நடைபெற்றது. இசையரங்கை நாடக ஆசிரியர் திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி துவக்கி வைத்து, திரு. மாரியப்பாவின் இசைத் திறமையை வெகுவாகப் பாராட்டிப் பேசினர். திரு. ம. பொ. சி. இசையரங்கிற்குத் தலைமை தாங்கினர். அவர் பேசுகையில், திரு. மாரியப்பா இசையுலகில் அடைந்திருக்கும் உன்னத நிலையைப் பாராட்டி, அவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் 'இசையுலக இளம்பரிதி' என்ற பட்டம் மிகவும் பொருத்தமானது என்று குறிப்பிட்டார்.

திருப்பத்தூர் தமிழரசுக் கழக மாநாடு



வரவேற்புக் குழுவினர்:

திருவாளர்கள் மு. வேணுகோபால், கு. சு. கந்தசாமி, கே. எம். சீனிவாசன், கி. கவிதைநேசன், பூபதி ஆகியோரைப் படத்தில் காணலாம்.

தமிழரசு பெற்றே தீருவோம்!

—ம. பொ. சி.

★

[கடந்த 10—9—50-ல் திருப்பத்தூரில் (வ. ஆ) நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாட்டில் திரு. ம. பொ. சி. பேசியதின் சுருக்கம் வருமாறு:—]

தமிழரசுக் கழகம், ஒரு தனி அரசியல் கட்சியோ எனச் சிலர் ஐயுறுகின்றனர். இது தவறு. ஆளும் கட்சியான காங்கிரசுக்கோ அல்லது ஆட்சியைக் கைப்பற்ற விரும்பும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கோ எதிர்க் கட்சியல்ல எமது கழகம். தமிழகத்தை எந்தக் கட்சினர், அல்லது எந்த சாதியினர் ஆள்வது என்ற பிரச்னைகளுக்கு அப்பாற்பட்டது தமிழரசு இயக்கம். தமிழகம் தனியரசு நாடாக வேண்டும் - தமிழகத்தைத் தமிழரே ஆளவேண்டும் என்பதொன்றே எமது கோரிக்கை. இதற்காக தமிழரால் நடத்தப்படும் எந்தக் கட்சியுடனும் ஒத்துழைக்கவும், அவர்களது ஒத்துழைப்பைப் பெறவும் தமிழரசுக் கழகம் தயங்காது.

"தமிழரசு அண்மையில் கிட்டுமா?" என்று ஐயப்படுவாரும் உண்டு. இந்த சந்தேகப் பேர்வழிகளுக்கு ஒன்று கூறுகின்றேன். "வெள்ளையனே! வெளியேறு!" என்று நானும் எனது சக தேசியத் தோழர்களும் குரல் கொடுத்த போதும், 'செங்கோலுக்கு மிஞ்சி சங்கீதம் செல்லுமா?' என்று சந்தேகப் பட்டனர் சிலர். 'வெள்ளைக்காரனாவது, வெளியேறுவதாவது!' என்று விதண்டாவாதம் பேசினர் பலர். ஆனால், ஆகஸ்டு பதினைந்தில் வெள்ளையன் வெளியேறியதைக் கண்டோம். கதிரவன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் அஸ்தமித்ததைக் கண்டோம். இதுபோலவே தமிழகத்தில் தமிழரசு அமைவதையும் நீங்கள் காணத்தான் போகின்றீர்கள். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

அடிமையினங்கள் மூன்று

சுதந்திர இந்தியாவில் அரசுரிமை இல்லாது அல்லல்படும் இனங்கள் மூன்றே மூன்று. அவை தமிழினம், ஆந்திர இனம், மராட்டிய இனமாகும். ஒரிசாவை ஒரியா இனத்தவர் தான் ஆளுகின்றனர். அஸ்ஸாமை, அஸ்ஸாமியர்தான் ஆளுகின்றனர். வங்கம் பிளவு பட்டாலும், பிளவுபட்ட வங்கப் பிரதேசங்களை வங்காளியர்கள் தான் ஆளுகின்றனர். பாஞ்சாலமும் அப்படியே. இந்திய தேசிய இனங்களிலேயே மிகப் பிந்திய காலத்தில் முளைத்தது கேரள இனம். அவர்களுக்குங் கூட தனியாட்சி கிடைத்து விட்டது. அஃது, திருவிதாங்கூர் - கொச்சி யூனியனாகும். கன்னடருக்கும் தனியாட்சியுண்டு; அது மைசூர் ஆட்சி. எழுத்து மொழியும், இலக்கியப் பெருமையும் இல்லாத சௌராஷ்டிரர்கள் கூட வடக்கே தனியரசு பெற்று விட்டனர். ஆனால், விஜயநகர சாம்ராஜ்யம் கண்ட ஆந்திரருக்கு அரசுரிமை இல்லை; இந்து சாம்ராஜ்யம் கண்ட சிவாஜி வம்

சததுமராட்டியர்களுக்குத் தனியரசு இல்லை; சோழ சாம்ராஜ்யம் கண்ட தமிழகமும் தனியரசு நாடாகவில்லை.

வாக்குறுதி எங்கே?

மாகாண மொழிகளும், அம்மொழி வழிப்பட்ட கலைகளும் வளர்ச்சி பெறுவதற்கு முழு சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்று புதிய அரசியல் உறுதி கூறுகிறது. ஆனால், நடைமுறையில் நாம் காண்பதென்ன? இந்தி மாகாணங்களான உத்தரப் பிரதேசம், பீகார், விந்தியப் பிரதேசம், மத்திய பாரதம், மத்திய பிரதேசம் ஆகியவற்றில் இந்தி மொழி ஆட்சிமொழியாகி விட்டது. நீதிமன்றங்களும் இந்தி மொழியிலேயே நடத்தப்படுகின்றன அப்படியே ஒரிசா, அஸ்ஸாம், வங்கம் போன்ற மாகாணங்களில் அந்தந்த மாகாண மொழிகளே அரசு மொழியாகி விட்டன. நேற்று பிறந்த - கன்னித் தமிழின் வயிற்றிலுதித்த மலையாளம்கூட கேரள யூனியனின் ஆட்சி மொழியாகி விட்டது. ஆனால், உலக மொழிகளுக் கெல்லாம் முதன் மொழி எனப்படும் தமிழ் அரசு மொழியாகவில்லை. ஆங்கிலேயர் வெளியேறிய பின்பும் ஆங்கில மொழிதான் தமிழகத்தின் அரசுமொழியாக இருக்கிறது. இதை மானமுள்ள தமிழன் எவனேனும் பொறுத்துக் கொள்ள முடியுமா?

அரிசிப் பஞ்சம் போக அரசுரிமை வேண்டும்!

சோழ வளநாடு இன்று சோற்றுக்குத் திண்டாடுகிறது. பாண்டவருக்கும் கௌரவர்க்கும் போர் நடந்தபோது சோற்றுக்குத் தவித்த போர் வீரர்களுக்கு தமிழர் சோறு கொடுத்தார்களாம். இது நாம் அரசாண்ட காலத்துச் செய்தி. இன்று அரசுரிமை இழந்த தமிழர்கள் வயிற்றுச் சோற்றுக்கு டில்லித் தெய்வங்களை வரங் கேட்க வேண்டியிருக்கின்றது. நாம் அரிசி கேட்டால் அவர்கள் கோதுமை தருகின்றனர். அதையேனும் போதிய அளவு கொடுங்கள் என்றால் முடியாது என்கின்றனர். சென்னைக்கு அரிசி விற்க பர்மா தயாராக இருக்கிறது. ஆனால், அயல் நாட்டுடன் வாணிபம் செய்ய சென்னைக்கு உரிமைதர மறுக்கிறது டில்லி அரசு. இதன் விளைவென்ன? தமிழகமெங்கும் பஞ்சம், பட்டினி! தமிழகம் தனியரசு பெற்றிருப்பின், தேவையான உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து விலைக்கு வாங்கியிருக்கலாம். அரிசி விளையாத இலங்கை, இந்தியாவுக்கு அரிசி கடன் தருகிறது! இது எப்படி முடிகிறது? அதிகாரமில்லாக் காரணத்தால் சென்னை வாங்காது விட்ட அரிசியை இலங்கைக்கு விற்றது பர்மா தேசம். இலங்கையோ, தான் வாங்கிய அரிசியை டில்லி அரசுக்கு கடன் கொடுத்தது. இலங்கையிடமிருந்து வாங்கிய அரிசியில் ஒரு பகுதியை சென்னைக்குத் 'தானம்' கொடுத்தது டில்லி அரசு. இந்தக் கேவல நிலையை போக்குவதற்காகவும் தமிழரசு கோருகிறோம்.

நாம் கோரும் தமிழரசு வேறு தேசீய இனங்களுக்கு விரோதமானதல்ல. ஆந்திர இனத்தோடோ, அல்லது வட இந்தி

யாவிலுள்ள எந்த தேசிய இனத்தோடோ நாம் விரோதங் கொள்ளக் காரணமில்லை. பிராமணர் - பிராமணரல்லாதார் என்ற சாதி வேற்றுமையையோ, ஆரியர் - திராவிடர் என்ற நிறவேற்றுமையையோ தமிழரசுக் கழகம் அங்கீகரிக்கவில்லை. ஆகவே, தனியரசு பெற்ற தமிழகம் அகில இந்தியாவோடும் சமஷ்டியாக இருக்கவே விரும்புகிறது. மொழிவழி அரசுரிமை பெற்ற ருஷ்ய தேசிய இனங்கள் ஒரே சமஷ்டியாக இணைந்திருக்கவில்லையா? தனித்தனி அரசுரிமை பெற்ற அமெரிக்க மாகாணங்கள் ஐக்கியக் குடியரசை அமைத்துக் கொள்ளவில்லையா? அதுபோலவே, இந்தியாவிலும் மொழிவழி நாடுகள் தனித்தனி குடியரசாக அமைந்த பின்னர் அந்தக் குடியரசுகளின் கூட்டரசு ஒன்று அமைய வேண்டுமென விரும்புகிறோம்; அமைக்க முடியும் என்றும் நம்புகின்றோம். ஒரே உலக உணர்ச்சி வளர்ந்துவரும் இந்நாளில், தமிழர் ஒதுங்கி வாழ்வதென்பது முடியாத காரியம். சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் விழுங்கி ஏப்பமிட நினைக்கும் இந்தக் காலத்தில், இந்திய உபகண்டத்திலிருந்து தமிழகம் பிரிந்துநின்றால் பாதுகாப்பு பெற முடியாது. இதைப் புத்தி சுவாதீனமுள்ள எவரும் புரிந்து கொள்ள முடியும்.

'திராவிடஸ்தான்' கூச்சல்!

தமிழரிலே ஒரு கூட்டத்தார் 'திராவிடஸ்தான்' கோருகின்றனர். தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் தமிழினின்றே பிறந்த மொழிகளாதலால், அம்மொழி பேசுவோர் அனைவரும் தமிழர் அல்லது திராவிடர் என்கின்றனர். மொழியாராய்ச்சிப்படியோ, கலாச்சார வரலாறுப்படியோ இந்த வாதம் உண்மையாக இருக்கலாம். ஆனால், இதன்படிதான் அரசியல் அமையவேண்டும் என்ற அவசியமில்லை. 'திராவிடநற்றிருநாடு' என்ற சொற்றொடரைப் பயன்படுத்திய சுந்தரனார், 'திராவிடஸ்தான்' கோரவில்லை. திராவிடர் என்ற பெயரை ஆராய்ச்சி மேடையில் அரங்கேற்றிய கால்டுவெல்லும் பிறரும் அரசியலுக்காக இனம் பிரிக்கவில்லை. ஆகவே, திராவிடர் என்ற ஏட்டுச் சொல்லை வைத்துக்கொண்டு நாட்டைப் பிரிக்க முயலுவது நடவாத காரியம்.

ஒரு மொழிக்கும், இன்னொரு மொழிக்கும் பூர்வீகத் தொடர்பு இருக்கிறதென்பதற்காக அம்மொழிகளைப் பேசுவோர் ஒரே இனத்தவர் என்று கூறுவதும், ஒரே அரசில் இணைந்திருக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்வதும் அனுபவத்திற்குப் பொருந்தாத கூற்று. பீகாரிகளும் உத்தரப் பிரதேசத்தவரும் இந்தி மொழியால் இணைக்கப்பட்டிருக்கின்றனர். அப்படியிருந்தும், பீகார் மாகாணத்தவர், உத்தரப் பிரதேச மக்களிலிருந்து தங்களை வேறுபட்டவர்களாகவே எண்ணுகின்றனர். மராட்டியருக்கும் மகா கோசலருக்கும் இந்தி பொது மொழியாக இருக்கிறது.

(45-ம் பக்கம் பார்க்க)

தமிழும் மார்க்ஸீயக் கோட்பாடும்

கு. முத்தையா

★

நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே தூரானியம், ஆரியம், ஆங்கிலம், இந்தி ஆகிய வேற்று மொழிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தமிழகத்தின் மீது படையெடுத்தன; அதிகார பலங்கொண்டும் ஆதிக்கம் செலுத்தின. என்றாலும், அவற்றின் ஆதிக்கத்தால் தமிழ் மொழியின் 'சீரிளமை' குன்றவில்லை. தமிழின் தனித்தியங்கும் 'ஆற்றலை' அழிக்க வடமொழியாளர் செய்த முயற்சிகள் பலப்பல. ஆனால், அவர்கள் முயற்சிகள் அனைத்தும் முறிந்தன. காரணமென்ன? தமிழின் தனித்தியங்கும் பலமும், அதற்கே உரித்தான சொற்களஞ்சியமும் ஆகும். அதனால்தான், ஆரியம் பேச்சு வழக்கிலிருந்து ஒழிந்ததுபோல் அல்லாமல், தமிழ் உல்லாச நடை போட்டு உலவி வருகிறது.

தமிழ் மொழிக்கேயுரிய இலக்கணத்தைச் சிலர் சிதைத்திருக்கலாம்; அதன் சொற்களஞ்சியத்தினின்றும் கணக்கற்ற சொற்களைக் கொள்ளையடித்திருக்கலாம். அவற்றாலெல்லாம் தமிழின் சொற்களஞ்சியம் வற்றிப் போகவில்லை. வற்றாத ஊற்றேபோல் தினம் தினம் வளர்ந்து வருவதையும் காண்கிறோம். தமிழ்போன்ற தனித்தியங்கும் தன்மை படைத்த ஒரு மொழியை அழித்திடவும் முடியுமா? 'முடியாது' என்கிறார் தோழர் ஸ்டாலின். அவர் கூறுவதாவது:—

"பலாத்காரமாக ஒரு மொழியை மாற்றியமைக்க முயலும்போது, அந்தத் தாக்குதலை எதிர்த்து நிற்கும் பலத்தைத் தாக்கப்படும் மொழி அடைந்து விடுகிறது. இது, வரலாற்று உண்மை. பல நூற்றாண்டுகளாக, துருக்கிய மொழிப் புரட்டர்கள் பால்கன் நாடுகளின் மொழிகளை முற்றும்சிதைத்து அழித்துவிட முயன்றனர். அக்காலத்தில் பால்கன் மொழிகள் ஒரு சில மாறுதல்களை அடைந்தன. துருக்கிய சொற்கள், சொற்றொடர்கள் சில பால்கன் மொழிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. திரிபுகளும் மாற்றங்களும் கூட ஏற்பட்டன. ஆனால், பால்கன் மொழிகளின் ஆணிவேரை துருக்கி மொழிப் புரட்டர்களால் அசைக்க முடியவில்லை. புயற்காற்று போன்ற தாக்குதலுக்கும் வளைந்து கொடுக்காது பால்கன் மொழிகள் நிமிர்ந்து நின்றதற்குக் காரணம் என்ன? அவற்றின் தனியான இலக்கண அமைப்பும், அடிப்படையாகவுள்ள சொற்களஞ்சியமும் பாதுகாக்கப்பட்டதே யாகும்."

ஒரு மொழி தனக்கெனச் சொந்தமாக இலக்கண அமைப்பும் அள்ள அள்ளக் குறையாத சொற் களஞ்சியமும் படைத்திருக்குமானால், அதை அழிக்க எவராலும் இயலாது என்பதை

ஸ்டாலின் கூறுவதைக்கொண்டு அறியலாம். பால்கன் நாடுகளின் வரலாறு மட்டுமல்ல; ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு இரையான வேறு பல நாடுகளின் வரலாறும் இதே பாடத்தைத்தான் போதிக்கின்றன.

ஒரு கோட்டையை வெளியிலிருந்து தாக்கிப் பிடிப்பதைவிட உள்ளிருந்தே தாக்கிப் பிடிப்பதுதான் எளிது. அதுபோலவே, தமிழ் மொழியை வெளியிலிருந்து தாக்குவதைவிட உட்புகுந்தே தாக்குவதுதான் அழிப்பதற்கு சுலபம் என்று எண்ணினர் வடமொழியாளர்கள். இதைச் சென்னை கிறித்தவக் கல்லூரி தலைமைத் தமிழ்ப் பண்டிதராக இருந்த காலஞ்சென்ற திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் விளக்குகிறார்:

" தமிழ்மக்களிடமிருந்த பல அரிய விஷயங்களை மொழிபெயர்த்துக் கொண்டு அவற்றைத் தமிழர் அறியும் முன்னரே தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழுக்கு அவை வந்தன போலவும் காட்டினர்.........

" தாங்கள் செல்லுமிடங்கட்குத் தக்கபடி புதிய புதிய லிபிகள் ஏற்படுத்திக் கொள்ளும் ஆரியர், தமிழ் நாட்டிற்கேற்றபடி தமிழ் லிபியை யொட்டி 'கிரந்தம்' என்னும் பெயரில் புதியதோர் லிபி வகுத்தனர். தமிழரை வசீகரிக்குமாறு அந்த லிபியில் பல நூல்கள் வரைந்தனர்.'

" இன்னும் தமிழ் அரசர்களிடம் அமைச்சர்கள் என ஏம்மேல் அதிகாரப்பிரபுக்கள் எனவும் அமர்ந்து கொண்டு தமிழ்ச் சொற்களைச் சிதைத்தும், அவற்றை தங்கள் சப்த சாஸ்திரத்திற்கு இயைந்த வண்ணம் ஓசை வேறுபாடு செய்து கொண்டும் தாங்கள் வகுக்கப் புகுந்த புராணங்களில் வழங்குவாராயினர்."

தாம் ஆராய்ந்தறிந்த உண்மையை ஒளிவு மறைவின்றி அப்படியே வெளியிடுகின்றார் சாஸ்திரியார்! தமிழ் மொழியின் கோட்டைக்குள் புகுந்து செய்த நாசவேலை இது. தொல்காப்பியர் காலத்திலிருந்தே இந்தத் 'தொண்டு' தொடர்ந்து நடந்து வந்திருந்த போதிலும் தமிழை அழிக்க முடியவில்லை. இங்குமங்குமாக சில மாற்றங்களே ஏற்பட்டன. தேவையற்ற புதுப்புதுச் சொற்கள் தமிழினுள் புகுத்தப்பட்டன. என்றாலும், அவற்றால் தமிழின் அடிப்படை மாறவே இல்லை. காரணம் என்ன? ஸ்டாலின் கூறுவதுபோல தமிழ்மொழி, தனக்கென்றே ஒரு தனியான இலக்கண அமைப்பையும் அதற்குப் பயன்படக் கூடிய ஒரு அடிப்படைச் சொற்களஞ்சியமும் படைத்திருப்பதுதான். இவையின்றேல், அடுத்தடுத்து தன்மேல் வந்த தாக்குதல்களுக்கு இரையாகி தமிழ் அழிந்து போயிருக்கும்.

இரண்டு மொழிகளை மோதவிட்டால், அவற்றிற்கு முற்றிலும் வேறானதொரு மூன்றாவது மொழி தோன்றுமென்கின்

றனர் தர்க்கவியல் நிபுணர்கள். இன்றுள்ள தமிழ் தனிமொழியல்ல; பல மொழிகளின்-குறிப்பாக, சமஸ்கிருதமும் பண்டைத் தமிழும் கலந்த ஒரு புது மொழி என்று வாதாடுவோரும் உளர். இவர்களது கூற்றை மறுத்து ஸ்டாலின் கூறுகிறார் :

"இரு மொழிகளின் மோதுதலிலிருந்து அவற்றிற்கு முற்றும் வேறுபட்ட மூன்றாவதொரு மொழி தோன்றுமென்று வாதாடுவது தவறு. நடைமுறையில் பார்த்தால் இரு மொழிகளும் சேருங்கால், இரண்டில் ஒன்றுதான் வெற்றியடைகின்றது. வெற்றியடையும் மொழியின் இலக்கண அமைப்பும் சொற்களஞ்சியமும் அம்மொழிக்கே உரித்தான வளர்ச்சி விதிகளின்படியே வளர்ந்து முன்னேறுகின்றது. மற்ற ஒரு மொழியோ தனது குணத்தைச் சிறிது சிறிதாக இழந்து காலப் போக்கில் அது இருந்த இடமே தெரியாமல் மறைந்து விடுகிறது."

"இரு மொழிகளைப் பிணைக்க முயற்சிக்குங்கால் வெற்றியடைந்த மொழியின் சொற்களஞ்சியத்தில், தோல்வியுற்ற மொழியின் பல சொற்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. இதனால் வெற்றியடைந்த மொழியின் பலம் குன்றுவதில்லை. அதற்கு மாறாக, அதிகப்படுகின்றது."

ஸ்டாலின் கூறும் வாதம் தமிழுக்கு முற்றும் பொருந்தும். சமஸ்கிருதம் போன்ற தமிழிற்கு முற்றிலும் வேறான மொழிகளுடன் தமிழை ஐக்கியப் படுத்தச் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. தொல்காப்பியர் காலத்தில் மட்டுமின்றி, பின்னால்வந்த சமணர்கள், கிறித்துவர்கள் காலத்திலும் தமிழ் இலக்கணத்தைச் சிதைத்து வேறு புதுப்புது இலக்கணங்கள் வகுக்க முயற்சிக்கப் பட்டன. அதனாலும் தமிழுக்கே உரித்தான இலக்கண அடிப்படையைச் சிதைக்க முடியவில்லை.

இன்று இந்தி மொழியைத் தமிழகத்தில் பலவந்தமாகப் புகுத்தி அதனோடு தமிழை ஐக்கியப்படுத்த முயற்சி நடக்கிறது. முன்னர் தோன்றிய முயற்சிகளுக்கு ஏற்பட்ட தோல்விதான் இந்த முயற்சிக்கும் ஏற்படும். தனக்கென்ற இலக்கண அமைப்பும், அடிப்படைச் சொற்களஞ்சியமுமில்லாதது இந்தி மொழி. இத்தகைய வலிமையற்ற மொழி, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தனி இலக்கணமும், தனக்கே உரித்தான சொற்களஞ்சியமும் உடைய தமிழை எப்படி சிதைக்க முடியும்? முடியாது என்று வரலாறு கூறுகிறது.

ஒரு சமூகத்திற்கு அடித்தளம் எது? அதன் பொருளாதார அமைப்பே யாகும். பொருளாதார அமைப்பு மாறினால் சமூகத்தின் அரசியல், கலை, சட்டம், நீதி அனைத்தும் மாறிவிடும். சமூகத்தைப் பற்றிய மார்க்சீயக் கோட்பாடு இது. இது

போலவே, ஒரு நாட்டில் புரட்சி நடந்து பொருளாதார அமைப்பு மாறுங்காலத்தில் அந்த நாட்டின் மொழியும் மாறி விடுகிறதா? இந்த கேள்விக்கு "இல்லை" என பதிலளிக்கிறார் ஸ்டாலின்.

"மொழி என்பது இந்த அடித்தளத்தை (பொருளாதார அமைப்பு) அல்லது அந்த அடித்தளத்தை ஆதாரமாகக் கொண்டு எழுவதல்ல. ஒரு சமூகத்தின் சிதைந்து கொண்டிருக்கும் தளத்திலிருந்தோ, அல்லது வளர்ந்து கொண்டிருக்கும் தளத்திலிருந்தோ உதிப்பதல்ல மொழி. பல நூற்றாண்டுகளாகத் தோன்றித் தோன்றி மறைந்த பல சமூக அமைப்புகளுக்கும்-ஒருசமூக சரித்திரம் முழுமைக்குமே பொதுவாகத் தோன்றியுள்ளதுதான் மொழி. ஒரு தனி வர்க்கத்தால் மட்டும் உண்டாக்கப்படுவதல்ல. சமூகத்திலுள்ள எல்லா வர்க்கங்களாலும்வாழையடி வாழையாகத் தோன்றிய நூற்றுக்கணக்கான பரம்பரைகளின் முயற்சிகளினாலும் உண்டாக்கப்படுவது மொழி. இதனால்தான், ஒரு சமூகத்திலுள்ள உறுப்பினர் அனைவருக்கும் பொதுவாக இருக்கின்றது மொழி. கருத்தை வெளியிட உதவும் ஒரு மொழியின்வேலை, ஒரு வர்க்கத்திற்கு சாதகமாகவும், இன்னொரு வர்க்கத்திற்குப் பாதகமாகவும் இருப்பதல்ல. சமூக முழுமைக்கும், சமூக வர்க்கங்கள் அனைத்திற்கும் பொதுவாகப் பயன்படுவதுதான் மொழியின்வேலை."

முதலாளித்துவ அமைப்பு ஒழிந்து சோஷியலிச அமைப்பு உருவாகும் சமயத்தில் இப்பொழுதுள்ள மொழி மறைந்து புதிய தொரு மொழி தோன்றிவிடாது. இத்தகைய மாற்றம் தேவையே இல்லை.

வர்க்க பேதமில்லாமல் சமூகம் அனைத்திற்கும் பொதுவாக உள்ளது மொழி என்பதை ஸ்டாலின் தெளிவாக்கியிருக்கிறார். தொழிலாளி கொச்சையாகப் பேசினால் அது "தொழிலாளி வர்க்க மொழி" யென்றும், உயர்ந்த முறையில் பண்டிதர்களும், மேல் வர்க்கங்களும் பேசினால், அதை "பூர்ஷ்வா (முதலாளி வர்க்க) மொழி" யென்றும், மொழியை வர்க்க பேதப்படுத்துவது மார்க்ஸீயமல்ல என்பதை ஸ்டாலின் தெளிவு படுத்தியிருக்கிறார். தொல்காப்பியர் காலத்துத் தமிழுக்கும், இன்றைய தமிழுக்கும் மாற்றங்கள் பல உண்டு. அதனால் தமிழின் அடிப்படை மாறிவிட்டதாக அர்த்தமில்லை. மலை, காடு, மனிதன், ஆண், பெண், போ, வா என்பன போன்ற அடிப்படைச் சொற்கள் மாறிவிட்டனவா? இல்லை. அல்லது வாக்கியங்களில் வரும் எழுவாய் பயனிலை, செயப்படுபொருள் முதலிய இலக்கணத் தொடர்புகள் மாறிவிட்டனவா? அதுவுமில்லை. தமிழ்ச் சொற்கள் பல மறைக்கப்பட்டன. புதுச்சொற்கள் பல புகுத்தப்பட்டன என்பது உண்மைதான்; இதை அடிப்

(45-ம் பக்கம் பார்க்க)

(40-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியிருந்தும், மகாகோசலர் வேறு இனம்; தாங்கள் வேறு இனம் என்றே மராட்டியர்கள் எண்ணுகின்றனர். அதுமட்டுமல்ல; இந்தி மொழியால் ஊடுருவப் பெற்ற பீகார், விந்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், மத்திய பாரதம் ஆகிய அனைத்தும் தனியரசு நாடுகளாகவே விளங்குகின்றன. சௌராஷ்டிரஸ்தான் மக்களின் பேச்சு மொழி, சௌராஷ்டிரமாக இருப்பினும், அவர்கள் எழுத்து மொழியும் இலக்கிய மொழியும் குஜராத்தியாகத்தான் இருக்கின்றன. அதனாலேயே அவர்கள் தங்களை குஜராத்தி இனத்தவராக எண்ணுவதில்லை. அந்த இனத்திற்கு வேறுபட்ட சௌராஷ்டிர இனமாகவே மதிக்கின்றனர். ஆகவே, மொழித் தொடர்பு காரணமாக தென்னிந்தியர் அனைவரும் ஒரே தேசிய இனத்தவர் - திராவிட இனத்தவர் என்பதோ, அவர்கள் அனைவரும் ஏக அரசின் கீழ் இருக்க முடியுமென்று கூறுவதோ அனுபவ ஞானமற்றவர்களின் ஆதிக்கப் பேச்சு.

திராவிடக் கழகத்தவர்கள் வடமொழியை வெறுக்கின்றனர்; அம்மொழியிலிருந்து பெயர்க்கப்பட்ட தமிழ் இலக்கியங்களை எரிக்கவும் விரும்புகின்றனர். ஆனால், ஆந்திரர்களும், கேரளர்களும் நாளுக்கு நாள் வடமொழிப் பண்பால் ஊடுருவப்பட்டு வருகின்றனர். வடமொழி இலக்கியங்களைத் தங்கள் சொந்த இலக்கியங்களாகவும் எண்ணிப் போற்றுகின்றனர். இதற்கு மாறாகப் பேசுகின்ற - எழுதுகின்ற ஒரு ஆந்திரனையோ அல்லது மலை

(44-ம் பக்கத் தொடர்ச்சி)

படை மாற்றம் என்று சொல்வதற்கில்லை.

ஒரு மொழியில் பிற மொழிச் சொற்கள் கலப்பதற்கான அவசியத்தையும், காரணத்தையும் ஸ்டாலின் கூறுகிறார்:

"தொழிலும், விவசாயமும், வாணிபமும் தொழில் நுட்பங்களும், விஞ்ஞானமும் இடைவிடாது வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்த வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் ஒரு மொழி தனது சொற் களஞ்சியத்தில் புதுப் புதுச் - சொற்களையும். சொற்றொடர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்."

தமிழில் இல்லாத விஞ்ஞானக் கருத்துக்களை உணர்த்தும் சொற்கள் பல தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் சேர்ந்துள்ளன. இது வளர்ச்சி விதிக்குட்பட்ட சேர்க்கையேயொழிய சிதைவு அல்ல.

ஒரு மொழியில் பிறமொழிச் சொற்கள் சேரவேண்டுமென்பதினாலேயே கண்மூடித்தனமாக கண்டதையெல்லாம் சேர்த்து "அவியல்" செய்ய வேண்டுமென்று அர்த்தமல்ல. விஞ்ஞானம் வளரும்பொழுது அதன் தேவைக்கேற்ப புதிய கருத்துகளை உணர்த்துவதும், ஏற்கனவே அம்மொழியில் இல்லாததுமான சொற்களை மட்டுமே சேர்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் மொழி வளர்ச்சிக்கு வழி.

யாளியையோ காண முடியாது.

திராவிடக் கழகத்தார், வடமொழிச் சொற்கள்கூட தமிழ் மொழியில் கலக்கக் கூடாதென்கின்றனர். ஆந்திரரும் கேரளரும், தங்கள் மொழி நூல்களில் எவ்வளவுக் கெவ்வளவு வடமொழிச் சொற்கள் கலக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அவற்றை உயர்ந்த இலக்கியங்களாக மதிக்கின்றனர். கன்னட இனத்தவரும் அப்படித்தான். இந்த லட்சணத்தில் அவர்களையும் ஒன்று சேர்த்து திராவிடஸ்தான் அமைக்க விரும்புவோர், ஒன்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்பவர்களாக இருக்கவேண்டும்; அல்லது பிறரை ஏமாற்றுபவர்களாக இருக்க வேண்டும்.

இப்போதும் சரி, தமிழகம் தனியரசு நாடான பிறகும் சரி; தென்னிந்திய மக்களிடையே ஒரு கலாச்சாரக் கூட்டுறவை ஏற்படுத்த முயலும் எவரையும் நாம் எதிர்க்கப் போவதில்லை. கலாசார ஒற்றுமைக்காக 'திராவிடர்' என்ற சொல் பயன்படுத்தப்படுமானால், அதையும் நாம் ஆட்சேபிக்க மாட்டோம். திராவிடர் என்ற சொல்லை அரசியல் இயக்கத்தில் கலப்பதைத் தான் நாம் எதிர்க்கிறோம்.

வேங்கடத்துக்கு வெளியே போ!

திராவிட இயக்கத்தவர்கள் உண்மையில் திராவிடஸ்தான் அடைய விரும்புவார்களானால், அவர்கள் வேங்கடத்துக்கு வெளியே போய் வேலை செய்ய வேண்டும். தமிழ் நாட்டுக்கு உள்ளே அவர்களுக்கு வேலை இல்லை. வேங்கடத்துக்கு வெளியே விந்தியம் வரையுள்ள மக்களிடம் அவர்கள் வெற்றி பெறுவார்களானால், அப்புறம் தமிழர்களிடையே வெற்றி பெறுவதும் எளிதாகும்.

திராவிடஸ்தான்; ஆந்திரஸ்தானே!

திராவிடஸ்தான் அமையுமானால், தமிழர் கதி அதோ கதிதான். இதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரால் சென்னை மாகாணத்தை இருபதாண்டுகள் வரை ஆட்சி புரிந்தவர்கள் யார்? பொப்பிலி அரசர், பானகல் அரசர், முனுசாமி நாயுடு போன்ற ஆந்திரர்கள்தான். அன்று அந்த ஆந்திர ஆதிக்கத்துக்கு அடிமைப் பட்டுக் கிடந்த கூட்டத்தார்தான் இன்றும் திராவிடஸ்தான் கோருகின்றனர். ஆகவே, இவர்கள் முயற்சியால் அமைக்கப்படும் திராவிடஸ்தான் ஆந்திரஸ்தானகத்தான் இருக்குமென்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம்.

ஆகவே, தமிழ் மக்களை, குறிப்பாக மாணவர்களை வேண்டுகிறேன். வேங்கடத்துக்கு வெளியேயுள்ளவர்களின் ஆதிக்கத்திலிருந்து தமிழ் மக்கள் விடுதலை பெற வேண்டுமானால், உள்நாட்டுப் பூசல்கள் தவிர்க்கப்பட வேண்டும். பிராமணர், பிராமணரல்லாதார் என்ற சாதி வெறிச்சண்டையும், இந்து-முஸ்லிம் என்ற மதவெறிப் போரும் தமிழினத்தவரை ஒன்று பட்டா

நாடகத்தில் கட்டபொம்மன்

(டி. கே. ஷண்முகம்)

★

முப்பதாண்டுகளுக்கு முந்திய நினைவுகள்; நான் ஏழு வயதுச் சிறுவன். 'மதுரை தத்துவ மீனலோசனி வித்துவ பால சபா'வில் நாங்கள் நடிகர்களாயிருந்த காலம். திருநெல்வேலி மாவட்டத்தில் 'போலி நாயக்கனூர்' என்றொரு சிற்றூர். அந்த ஊரில் நாங்கள் நாடகம் ஆடிக் கொண்டிருந்தோம். பக்கத்தில் 'முடிமன்' என்று மற்றொரு சிற்றூர்; அங்குதான் கம்பெனி வீடு.

முடிமன்னுக்கும் போலி நாயக்கனூருக்கும் ஏறக்குறைய ஒரு மைல் தொலைவிருக்கலாம். முடிமன்னிலிருந்து இரண்டு, மூன்று மைல் தொலைவில்தான் 'பாஞ்சாலங் குறிச்சி' இருப்பதாகப் பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள். அந்த மண்ணுக்கே ஒரு தனி வீரமென்றும், முயல் நாயைத் துரத்தும்; பாம்பு கீரியைத் துரத்தும் என்றெல்லாம் கதை கதையாகப் பேசுவார்கள். அந்த மண்ணை யாரும் எடுத்துப் போகாதபடி வெள்ளைக்காரன் காவல் போட்டிருக்கிறான் என்று கூட பேசிக் கொண்டார்கள். எங்களுக்கெல்லாம் அந்தப் பாஞ்சாலங் குறிச்சியைப் பார்க்க வேண்டுமென்று ஆசைதான். என்ன செய்வது, யாராவது அழைத்துப் போனால் தானே!...அன்று, அந்த மண்ணின் பெருமை எங்களுக்குத் தெரியாது. இன்று அதைப் பற்றி எண்ணும் போதெல்லாம் எனக்கு உள்ளத்தில் ஒரு தனி மகிழ்ச்சி. வீரபாண்டியன் பிறந்த மண்ணில் முப்பதாண்டுகளுக்கு முன் நாம் நாடகமாடியிருக்கிறோம் என்று எண்ணும் போது உண்மையில் உள்ளம் பூரிக்கின்றது.

போலிநாயக்கனூரில் நாடகம். முடிமன்னிலிருந்து நாங்கள் எல்லோரும் நடந்தே செல்ல வேண்டும். வண்டிப் பாதை கிடையாது. சப்பாத்துக் கள்ளிகளும், முட்புதர்களும் நிறைந்த காடு முரடான ஒற்றையடிப் பாதை வழியாக இரவு ஏழு மணி சுமாருக்கு முடிமன்னிலிருந்து புறப்படுவோம். மங்கலான வெளிச்சமுள்ள ஒரு அரிக்கன் லைட்டைப் பிடித்துக் கொண்டு முன்னால் ஒருவர் செல்வார். நாங்களெல்லோரும் அவரை நெருங்கியபடி நடந்து செல்வோம். நாடகம் முடிந்து திரும்பும்போதும் இதே நிலையில் தான் திரும்புவது வழக்கம். இந்தப் பாதையில் போகும் போதும் திரும்பும் போதும் எங்களில் சிலபேருக்கு குலை நடுக்க

மல் செய்து நமது அடிமைத் தனத்தை உறுதிப்படுத்தி விடும். இந்தப் பூசல்களைக் கிளப்புவோர் உண்மையில் தமிழர்களின் நண்பர்களல்லர். தமிழர் அனைவரையும் ஒன்றுபடுத்த விரும்பும் ஓரே இயக்கம் தமிழரசு இயக்கம்தான்.

மெடுக்கும். சில சமயங்களில் அருகில் புஸ்ஸென்று சப்தம் கேட்கும். செடிகளுக்கிடையில் ஏதோ ஓடுவது போலத் தோன்றும். பக்கத்தில் வரும் பெரியவர்களைக் கட்டிக் கொள்ளுவோம். ஒருநாள் வழக்கம் போல் நாடகம் முடிந்து திரும்பி வரும்போது புதர்களின் மறைவிலிருந்து திடீரென்று "ஐயா, ஐயா!" என்று ஒரு குரல் கேட்டது. எல்லோரும் சட்டென்று நின்ருர்கள். எனக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. முன்னல் சென்றவர் விளக்கை முகத்திற்கு நேரே பிடித்தபடி "யாரையா?" என்று அதட்டிக் கேட்டார். இருளின் வலிமையை இன்னும் அதிகப்படுத்திக் காட்டும் அந்த மங்கல் வெளிச்சத்தில் கரிய நிறமுடைய ஒரு மனித உருவம் நிற்பது தெரிந்தது. பெரிய ஆஜானுபாகுவான தோற்றமும் வெண்மை நிறமுடைய கிருதா மீசையும் ஒரு கையில் வேல் கம்பும் தாங்கி நின்ற அந்த உருவத்தைப் பார்க்கவே அச்சமாயிருந்தது.

"சங்கரதாஸ் சாமி கூட வாருங்களா? அவங்களைப் பாக்கணும், சௌரியமாப் பேசணும்" என்று கூறியது அந்த உருவம்.

உடனே எங்களில் ஒருவர், "சாமிங்களுக்கு ஒடம்பு சரியில்லே; நாளைக்கி வெள்ளென முடிமன்னுக்கு வாங்க பார்க்கலாம்." என்று சொல்லிவிட்டு நடந்தார். நாங்களும் அவரைத் தொடர்ந்தோம்.

தூ. தா. சங்கரதாஸ் சாமிகள் எங்கள் நாடகாசிரியர். எங்களுக்கு மட்டுமல்ல; தமிழ் நாடக உலகுக்கே அவர்கள் தான் தலைமையாசிரியர். அந்தக் காலத்தில் அவர்கள் பாட்டைப் பாடாத நடிகர்களே நாடக உலகில் கிடையாது. மிகப் பெரிய தமிழ்ப் புலவர். முடிமன்னிலிருந்தபோது அவர்கள் உடல் நலங் குன்றியிருந்தார்களாதலால் இரவில் நாடகக் கொட்டகைக்கு வருவதில்லை. வீட்டிலேயே தங்கிவிடுவது வழக்கம்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் நானும் என் வயதுடைய மற்றும் சிலரும் சாமிகள் இருந்த தனி வீட்டிற்குச் சென்ருேம். இரவு கண்டது பேயா, மனித உருவமா என்பதைத் தெளிவு படுத்திக் கொள்வதற்காகத்தான்.

மனிதன்தான், ஐயமில்லை. அதே பெரியவர் கைத்தடியை ஊன்றியபடி இருமிக் கொண்டே வந்து சாமிகள் அருகில் உட்கார்ந்தார். சாமிகளுக்கும் பெரியவருக்கும் நீண்ட நேரம் பேச்சு நடந்தது. பெரியவர் கூறியதின் சுருக்கம் இதுதான் :

"கட்டப்பொம்மு, ஊமைத்துரையைப் பற்றியும் தானபதிப் பிள்ளை, பாதர் வெள்ளை இவர்களைப் பற்றியும் பல பல பொய்க் கதைகள் கட்டிவிடப்படுகின்றன. வெள்ளைக் காரனுக்குப் பயந்து உண்மையான சங்கதிகளைச் சொல்லப் பயப்படுகிருர்கள். என் முன்னேர்கள் வெள்ளையத்தேவன் வமிசத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் வீட்டில் ஒரு பழைய

எட்டுச்சுவடிக் கட்டு இருக்கிறது. அதில் நடந்தது நடந்தபடியே செய்யுட்களாக அந்தக் காலத்தில் எங்கள் பெரியவர்களால் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் பெரிய நாடகாசிரியர் என்றும், மறக் குலத்தில் பிறந்தவர் என்றும் கேள்விப்பட்டேன். ஆகவே, அந்தச் சுவடிகளை உங்களிடம் கொடுத்து விடுகிறேன். அவற்றை வைத்துக் கொண்டு இப்போதில்லா விட்டாலும் எப்போதாவது ஒருகாலத்தில் இந்த உண்மை நிகழ்ச்சிகளை மக்கள் தெரிந்து கொள்ளும் முறையில் நாடகமாக்கி நடிக்க வேண்டும்.''

இவ்வாறு கூறிவிட்டு தன்னோடு கொண்டு வந்திருந்த ஒரு மூட்டையை அவிழ்த்துக் கந்தல் துணியிற் சுற்றியிருந்த சில சுவடிக் கட்டுகளைச் சாமிகளிடம் கொடுத்தார். இதைச் சொல்லும்போது அவர் கண்கள் சிவப்பேறின; குரல் தழுதழுத்தது. சாமிகள் அதை வாங்கி இரண்டொரு ஏடுகளைப் புரட்டிப் பார்த்துவிட்டு, "அருமையான நடை" என்று பாராட்டினார்கள். "இதற்காக உங்களுக்கு என்ன வேண்டும்?' என்றார்கள் சாமிகள். "ஒன்றும் வேண்டாம், எங்கள் முன்னோர்களின் சிறப்பை ஒரு காலத்தில் உலகம் அறிய வேண்டும். அதுதான் என் ஆசை'' என்றார் பெரியவர்.

அதற்குமேல் அவர்கள் பேச்சு எங்களுக்கு சுவையளிக்காததால் நாங்கள் போய் விட்டோம். அதன்பின் இரண்டொரு நாட்கள் கம்பெனி வீடு முழுதும் கட்டபொம்மன் பேச்சுதான். பெரியவர்கள் ஒவ்வொருவரும் அவ்வீரனைப் பற்றிக் கேள்விப்பட்ட கதைகளையெல்லாம் சொன்னார்கள். சாமிகள் கட்டபொம்மன் நாடகம் சீக்கிரம் எழுத உத்தேசித்திருப்பதாகவும் பேசிக் கொண்டார்கள். எதிர்பாராத ஒரு 'காண்ட்ராக்ட்' வந்ததால் கம்பெனி போலி நாயக்கனூர் முடிந்ததும் 'சென்னைக்கு இடம் மாறியது. சாமிகள் தமது உடல் நிலையை சரிப்படுத்திக் கொண்டு சென்னை வருவதாகக் கூறி அவர்கள் பிறந்த ஊராகிய தூத்துக்குடிக்குச் சென்றார்கள்.

சென்னை சென்ற இரண்டொரு வாரங்களில் உள்ளம் திடுக்கிடும் செய்தி எங்கள் செவிகளில் விழுந்தது. "சாமிகள் பக்கவாதத்தால் பீடிக்கப்பட்டு வலது கால், வலது கை முடக்கப்பட்டு வாயும் பேச முடியாமல் படுக்கையில் இருக்கிறார்கள்'' என்ற செய்தி கேட்டு எல்லோரும் பதறினார்கள். ஏறக்குறைய ஓராண்டு முழுதும் இந்நிலையிலேயே படுக்கையிலிருந்து தமிழ் நாடகத் தந்தையார் பாண்டிச்சேரியில் 1922-ல் உயிர் நீத்தார்கள். கட்டபொம்மன் நாடகத்தைப் பற்றிய எண்ணங்களும் கனவுகளும் அதோடு மறைந்தன.

கட்டபொம்மனைப் பற்றிய அந்த உண்மை வரலாற்றுச் சுவடிகளும் எங்கு மறைந்ததோ எங்களுக்குத் தெரியாது. நாங்கள் பெரியவர்களாகி

நன்கு பொது அறிவு பெற்ற காலத்தில் சாமிகளின் புத்தகப் பெட்டி யாரிடமிருக்கிற தென்று விசாரித்துப் பார்த்தோம். சரியான தகவல் கிடைக்கவில்லை.

ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன் எங்கள் சொந்தக் கம்பெனி திண்டுக்கல்லில் நாடகம் நடத்தி வந்த போது தெருக்கூத்தில் ஒரு முறை கட்டபொம்மன் நாடகத்தின் ஒரு பகுதியைப் பார்த்தேன். மிகவும் சுவையாயிருந்தது. அது முதல் அந்த வர்ண மெட்டுகளில் எனக்கொரு தனி ஆசை. என்றாவது ஒரு நாள் கட்டபொம்மன் வரலாற்றைத் தெருக்கூத்து மேடையிலிருந்து, நல்ல உரையாடல்களுடன் எங்கள் நாடக மேடையில் நடிக்க வேண்டுமென்ற ஆர்வம் உண்டாயிற்று.

அப்போதெல்லாம் எங்கள் 'தேசபக்தி', 'கதரின் வெற்றி' நாடகங்கள் சர்க்காரால் தடை விதிக்கப்பட்டிருந்த காலம். கட்டபொம்மனை நடித்தால் சும்மா விடுமா சர்க்கார்?... ஆகவே, அந்த ஆர்வத்தைச் சிறிது ஒத்திவைத்தோம்.

நம் நாட்டிலிருந்து வெள்ளையர் வெளியேற்றப் பட்டபின் மீண்டும் கட்டபொம்மன் எங்கள் உள்ளத்தில் நடமாடத் தொடங்கினன். சேரன் செங்குட்டுவனை எங்கள் அரங்கில் கொண்டுவந்து நிறுத்திய திரு. ரா. வேங்கடாசலம் அவர்கள் ஒருநாள் திடீரென்று "கட்டபொம்மனையும் வ. உ. சிதம்பரனாரையும் நாடகமாக எழுதி கொண்டிருக்கிறேன் நடிக்கிறீர்களா?" என்றார். நண்பர் ரா. வேங்கடாசலம் அவர்கள் ஒரு வாரத்தில் ஒரு நாடகத்தை எழுதி முடிக்கும் ஆற்றலுடையவர்; ஆகவே, அவர் அவ்வாறு கூறியது எனக்கு வியப்பை யளிக்கவில்லை. என்றாலும், புதிய நாடகங்கள் பல தயாராகிக் கொண்டிருந்ததால் கட்டபொம்மனைப் பற்றிப் பிறகு சிந்திக்கலாமென்று விட்டு விட்டேன்.

இந்த நிலையில் நாங்கள் கோவையில் நாடகம் நடத்திக் கொண்டிருந்த போது, 'தமிழ் முரசு'வில் தலைவர் ம. பொ. சி. அவர்கள் 'வீரபாண்டியன்' வரலாற்றைச் சுவைபட எழுதத் தொடங்கினர்கள். அவற்றைத் தொடர்ந்து படித்து வந்தேன். கட்டபொம்மனை அரங்கேற்ற வேண்டுமென்ற எண்ணம் உறுதிப் பட்டது.

எங்கள் திட்டப்படி சென்னையில் கம்பெனியை நிறுத்துவதற்குள் கட்டபொம்மனை அரங்கேற்ற முடியாதென்று தோன்றியது. கோவை முடிந்து சென்னை வந்ததும், நண்பர் ரா. வேங்கடாசலம் அவர்கள் "முதல் முழக்கம்" என்று பெயரிட்டு கட்டபொம்மன் நாடகத்தைக் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைத்தார்.

கட்டபொம்மன் நாடகத்திற்கு வேண்டிய அந்தக் காலத்து உடைகள்; காட்சிகள் இவற்றையெல்லாம் இந்தக் கடைசி கட்டத்தில் புதிதாகத்

தயாரிப்பது சாத்தியமில்லை யென்று முடிவு செய்து அந்த முயற்சியைக் கைவிட்டேன்.

இந்த சந்தர்ப்பத்தில் சென்னையில் முதன் முதலாகத் தமிழரசுக் கழகத்தாரால் "கட்டபொம்மன் நினைவு நாள்" நடைபெற ஏற்பாடுகள் நடப்பதாகத் தலைவர் ம. பொ. சி. அவர்கள் கூறி, அந்த நாளில் கட்டபொம்மன் நாடகத்தின் சில காட்சிகளை மட்டும் நடிக்க முடியுமா வென்று கேட்டார்கள்.

அப்போதுதான் அவர்களிடம் நண்பர் ரா. வேங்கடாசலம் அவர்கள் நாடகம் எழுதித் தந்திருப்பதையும், அதை நடத்துவதற்குரிய வசதிகள் இல்லாதிருப்பதையும் கூறினேன். உடனே அவர்கள், "நீங்கள் கம்பெனி நிறுத்துவது சரி; ஆனால், கட்டபொம்மனை அரங்கேற்றி விட்டு நிறுத்துங்கள். இல்லையேல், அது பெருங் குறையாக விருக்கும். நீங்கள் நடித்து வழி காட்டாவிட்டால், மற்றவர்கள் யாரும் நடிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை" என்று உணர்ச்சியோடு கூறினார்கள்.

"கட்டபொம்மன் நினைவு நாளில் நடிக்க முடியாவிட்டாலும் கம்பெனியை நிறுத்துமுன் ஒரு முறையேனும் நடிக்க முயற்சி செய்யுங்கள்" என்று மேலும் புகன்றார்கள்.

அவர்கள் கூறிய வார்த்தைகள் என் உள்ளத்திலும் ஒரு புதிய எழுச்சியை உண்டாக்கின. 1950 பிப்ரவரி மாதம் 28-ந் தேதி கம்பெனி நிறுத்தப்படும் நாள். ஆகவே, நண்பர் ரா. வே. அவர்களுக்கு அவசரத் தபால் எழுதி வரவழைத்தேன். இருவரும் தலைவர் ம. பொ. சி. அவர்கள் இல்லம் சென்றோம். ஜனவரி 17-ந் தேதி நாடகக் காட்சி அமைப்புகளைப் பற்றி அவர்கள் இல்லத்தில் விவாதித்து முடிவு செய்தோம்.

ஊமைத்துரையாக நான்தான் நடிக்க வேண்டுமென்றும் நண்பர்கள் விரும்பினார்கள். எனக்கோ மற்ற சிரமங்களையெல்லாம் விட பாடத்தை நெட்டுருப் போடுவது பெரிய கஷ்டமாகி விட்டது. மற்றொருவரைக் கொண்டு பாடல்கள் எழுதச் செய்வது ஒரு பெரிய வேலையாக எனக்குத் தோன்றியது. ஆகவே, பொருத்தமான இடங்களில் பாரதியாரின் சில பாடல்களையே பாட முடிவு செய்தேன். அவசியமாக எழுத வேண்டிய சில பாடல்களை நானே எழுதினேன். எப்படியோ ஒரு வகையாக பிப்ரவரி மாதம் 10-ம் தேதி திரு. ம. பொ. சி. அவர்கள் தலைமையில் "முதல் முழக்கம்" சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் அரங்கேறியது.

இந்தியாவின் சுதந்திரப் போரைத் துவக்கியவர் ஜான்ஸி ராணியென்றும், சிப்பாய்ப் புரட்சிதான் சுதந்திரப்போரின் முதல் கட்டம் என்றும் தமிழ் நாட்டின் தேசியத் தலைவர்கள் கூட இன்னும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சிப்பாய்க் கலகம் நடப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே நமது தென்னாடு வீரபாண்டியன் தலை

மையில் உரிமைப் போரைத் துவக்கி விட்டது என்ற உண்மையை உலகம் அறிய வேண்டும். தீந்தமிழ் நாட்டில்தான் இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம் கேட்டது என்பதை வலியுறுத்தவே நாடகத்திற்கு "முதல் முழக்கம்" எனப் பெயரிட்டோம். எந்தக் குறிக்கோளைக் கொண்டு நாடகத்திற்கு அந்தப் பெயரைச் சூட்டினேமோ அது வெற்றி பெற்றது. சென்னையிலுள்ள பல தேசிய வாதிகள் எங்கள் நாடகத்தைப் பார்த்தபின் இந்த உண்மையை உணர்ந்து பெருமிதமடைந்தார்கள். நாடகத்திற்கு என் மனப்படி சரியான காட்சிகளும், உடைகளும் இல்லாதிருந்தும் கூட அமோகமான ஆதரவு கிடைத்தது. தொடர்ந்து பதினறு நாடகங்கள் நடந்தன, கம்பெனி நிறுத்தப்பட்ட 28-ம் தேதி பிப்ரவரி வரையில். இந்த நாடகத்தை மட்டுமாவது இன்னும் சில நாட்கள் நடத்தி விட்டுக் கம்பெனியைக் கலைக்கக் கூடாதா என்று எல்லோரும் நேரிலும் கடித மூலமும் கேட்டுக் கொண்டார்கள். எந்த வகையிலும் அது முடியாது போயிற்று. முதல் முழக்கமே ஏங்கள் கம்பெனியின் கடைசி முழக்கமாக முடிந்தது.

நாடகத்தை மேடையில்கண்டு பரவசமடையாத பொது மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற 'வானெலி'யிலும் கட்டபொம்மனை நடிக்க வேண்டுமென்று நிலைய நிர்வாகிகள் வேண்டினர்கள். அதற்கிணங்க ஒரு மணி நேர நாடகமாக 1950 ஏப்ரல் 7-ந் தேதி "வீரபாண்டியன்" என்னும் பெயருடன் கட்டபொம்மன் நாடகம் வானெலி வாயிலாகத் தமிழ் நாடு முழுதும் ஒலி பரப்பப்பட்டது. வானெலி நாடகங்களில் "வீரபாண்டியன்" தலை சிறந்ததென்று எல்லோரும் பாராட்டினர்கள்.

கட்டபொம்மன் சென்னையில் அரங்கேற்றப் பட்டாலும் எனது நண்பர் ரா. வே. அவர்களுக்கு ஒரு பெருங்குறையிருந்தது. திருநெல்வேலிச் சீமையில் ஒரு முறையாவது இந்நாடகம் நடிக்கப்பட வில்லையே என்று வருந்தினர்கள்.

அந்தக் குறையும் நீங்க ஒரு வாய்ப்புக் கிட்டியது. திருநெல்வேலி நகரசபைத் தலைவர் திரு. ப. ராமசாமி அவர்கள் வேண்டுதலை மறுக்க இயலாது அவர்கள் நடத்திய பொருட்காட்சியில் சில நாடகங்களை நடத்தினேம். அவற்றில் ஜூன் மாதம் 28, 29 தேதிகளில் 'முதல் முழக்கம்' நடைபெற்றது. கட்டபொம்மன் பிறந்த - அவன் வெள்ளையருடன் வீரப்போர் புரிந்த இடமான திருநெல்வேலிச் சீமையில் இந்நாடகத்தை எப்படி வரவேற்கிறர்கள் என்பதை நாங்கள் சிரத்தையுடன் கவனித்தோம். அதிலிருந்து ஒரு உண்மை தெரிந்தது.

முடிமன்னில் முப்பதாண்டுகளுக்கு முன் சந்தித்த பெரியவர் கூறியபடி பொய்க் கதைகள் பலவற்றைக் கேட்டுக் கேட்டு பழகிப்போன திருநெல்வேலி மாவட்டத்தாருக்கு ஆராய்ச்சி பூர்வமான இந்த உண்மை வரலாறு ஏதோ

புதிய கற்பனை போலவே தோன்றியதாக அறிந்தோம்.

வீரபாண்டியன் வேடத்தில் திரு. டி. கே. பகவதி

கட்டபொம்மன் அழிவுக்கு காரணம் தானபதிப்பிள்ளைதான் என்ற ஒரு உணர்ச்சி அநேகரிடம் காணப்பட்டது.

"தானாபதிப்பிள்ளையின் தூண்டுதலினால்தான் கட்டபொம்மன் கெட்டான். இல்லாவிட்டால் வெள்ளையர் அவனைத் தூக்கிலிட்டிருக்கமாட்டார்கள். நீங்கள் துரோகி தானாபதியைபெரிய வீரனாக்கிக் காட்டுகிறீர்களே!" என்று நண்பர்கள் சிலர் குறைப்பட்டார்கள். நான் அவர்களை விடவில்லை;

"ஐயா! தானாபதியின் பேச்சைக் கேட்டு கட்டபொம்மன் வீரப்போர் நடத்தித் தூக்கில் மடிந்ததால்தானே நாம் அவனைப் போற்றுகிறோம். இல்லாவிட்டால், எத்தனையோ பாளையக்காரர்கள் ஊர் பேர் தெரியாமல் மறைந்ததுபோல்தானே கட்டபொம்மன் வாழ்வும் முடிந்திருக்கும்" என்று கூறினேன். நண்பர்கள் அப்புறம் ஏதோ சொல்லிச் சமாளிக்க முயன்றார்கள்.

இந்தத் தவறான எண்ணங்கள் மாய்ந்து கட்டபொம்மனின் உண்மை வரலாறு இந்தியாமுழுவதும் பரவவேண்டும். நாடக மேடையில், வெள்ளித் திரையில் எல்லாம் நமது வீரபாண்டியன்வரலாறு விளங்கவேண்டும்.

மதிப்புரை :

நகர சபையாரின் நற்பணி

சென்னை நகர சபையார், "காம்பெண்டியம் 1950" என்ற பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர். மேல் நாடுகளில் செய்யப்படுவது போன்று, நகரசபை நிர்வாகத்தின் மீது பொது மக்கள் கவனத்தைத் திருப்புவதற்காக வெளியிட்டுள்ள புது மாதிரியான பிரசுரம் இது.

"வரிகள் எதற்காக வசூலிக்கப்படுகின்றன?" என்ற கேள்விக்கு அளிக்கப்பட்டுள்ள பதில் பிரசாரத் திறமை வாய்ந்தது. நகரசபை நிர்வாகம் பற்றி, இலாகாவாரியாக தனித்தனியே விளக்கப்பட்டுள்ளது. புகைப் படங்கள், வரிப்படங்கள், சித்திரப் படங்கள், 'கார்ட்டூன்கள்' மூலமே எல்லா விஷயங்களும் விளக்கப்பட்டிருப்பதால், பிரசுரம் ஏககாலத்தில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கிறது.

பிரசுரத்தின் முகப்புப் படம் நகரசபையார், குறைந்த வருவாயைக் கொண்டு கஷ்டப்படும் நிலையையும் அந்தக் கஷ்டத்தைப் போக்க உதவாமல், மதிலுக்குப் புறத்தே நின்று வேடிக்கைப் பார்க்கும் அமைச்சர்களின் போக்கையும் நன்கு விளக்குகிறது. நகரசபை வருமானம் ஒவ்வொரு ரூபாயிலும், இத்தனை அணு அல்லது பைசா இந்த வரி இனத்தில் வசூலாகிறது என்ற விவரம் தந்திருப்பது போற்றத் தக்கது.

நகர சபையார், அரசினரிடம் உதவி கேட்டு ஏமாந்த பரிதாபத்தை திராட்சைக் குலைக்கு எட்டி எட்டிப் பார்த்தும் கிட்டாமல் ஏமாந்த நரியின் கதையோடு ஒப்பிட்டுள்ள 'கார்ட்டூன்' சுவைமிக்கது.

பிரசுரம் நல்ல வழ வழப்பான காகிதத்தில் வர்ணப்படங்களுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நகரசபை சம்பந்தமான பல்வேறு நிர்வாகப் பொறுப்புகளை வகிக்கும் அதிகாரிகள், கவுன்சிலர்கள் ஆகியோரின் புகைப்படங்களும் அறிக்கையில் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

நகரசபையைப் பின்பற்றி, சென்னை அரசினரும் தமது நிர்வாகம்பற்றி இது போன்ற "காம்பெண்டியம்" வெளியிட வேண்டும்.

இத்தகைய ஒரு சிறந்த பிரசுரத்தை வெளியிட்ட நகரசபை நிர்வாகிகளை - குறிப்பாக, கமிஷனர் சி. நரசிம்மம், - தலைமை கணக்காளர் எஸ். சத்திய மூர்த்தி ஆகியோரைப் பாராட்டுகிறோம்.

பெரும் செலவுடன் சிரமம் பாராது வெளியிட்டுள்ள இந்தப் பிரசுரம் ஆங்கிலத்தில் இருப்பதால் ஒருசிலருக்குத்தான் பயன்படும். அடுதத ஆண்டிலேனும் வரி செலுத்துவோரில் பெரும்பாலோரான சாதாரண மக்களுக்கும் பயன்படக்கூடிய இத்தகைய அறிக்கையை நகரசபையார் தமிழிலும் வெளியிடுவார்கள் என்று நம்புகிறோம்.

செய்திகள் ★ ★

திருப்பத்தூர் தமிழரசுக் கழகம்

திருப்பத்தூர் தமிழரசுக் கழக மாநாட்டு வரவேற்புக் குழுவின் கூட்டம் 19-9-50ல் கூடியது. மாநாட்டு வரவு செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. மொத்தவரவு ரூ. 909-8-0 செலவு ரூ. 901-10-6. இருப்பு 7-13-6.

அடுத்த ஆண்டிற்குபின்வரும் புதிய செயற்குழு நிறுவப்பட்டது. தலைவர்: கே. எம். சீனிவாசன், துணைத்தலைவர் டி. கே. சுப்ரமண்யம், செயலாளர்: தி. பா. பூபதி, துணைச் செயலாளர்: எச். மாணிக்கம், பொருட்காப்பாளர்: ரா. ராமானுஜன். மற்றும், கு.சு. கந்தசாமி, ர. அருணாசலம், கி. கவிதைநேசன், பி. ராஜவேல் ஆகியவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

தியாகிகள் திருநாள்

பொருளாட்சி தமிழரசுக் கழகம், மாணவர் தமிழரசுக் கழகம், திருவள்ளுவர் நூல் நிலையம் ஆகியவற்றின் ஆதரவில் 17—9—50-ல் வ. உ. சி., கட்டபொம்மன், பாரதி ஆகிய தியாகிகளின் திருவிழாக்கொண்டாடப்பட்டது. நகர உயர்நிலைப் பள்ளியிலும் தேர்நிலை வெளியிலும் நடைபெற்ற கூட்டங்களில் திருவாளர்கள் கா. மு. ஷெரீப், இளங்கதிர், பொ.நா.நடராசன், பைந்தமிழன் ஆகியோர் தமிழரசுக் கழகக் கொள்கைகளை விளக்கி சொற்பொழிவாற்றினர். விழாவை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திரு. இரா. சுப்ரமணியம் பரிசுகள் வழங்கினர். திரு. பா. நீ. ஆனந்தம் நன்றி கூறினர்.

பொள்ளாச்சி தமிழரசுக் கழகம்

இக்கழகத்திற்கு புதிய செயற்குழுவினர் தேர்தல் கடந்த 24—9—50-ல் நடைபெற்றது. தலைவர்: பி.கே. சேதுராமசாமிக் கவுண்டர், துணைத் தலைவர்: பி. எம். வேங்கடாசலம் பிள்ளை, செயலாளர்: பொ. நா. நடராசன், துணைச் செயலாளர்: பொ. நா. வாசுதேவன்.

செயற்குழு உறுப்பினர்: இரா. சுப்பிரமணியம், வ. பா. அக்காலஞ் செட்டியார், பாசித், அ. சி. பாலு, சி. சண்முகம், க. வெள்ளிங்கிரி, பி. எஸ். வேலுச்சாமி, ஜே. எஸ். கிருஷ்ணராவ், சி. ஆர். எஸ். சாஸ்திரியார்.

மறைமலையடிகள் மறைவுக்கு இரங்கல்

வேகுப்பட்டி தமிழரசுக்கழக ஆதரவில், மறைமலை அடிகள் மறைவு குறித்து இரங்கற் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் மெ. மெ. லெ. இராமநாதன், திரு. சுப. சண்முகம், ஆ. பழ. குமரப்பன் ஆகியோர் அடிகளாரின் தமிழ்ப்பணி குறித்துப் பாராட்டினர்.

மாரியப்பன்-காமாட்சி திருமணம்

திருவள்ளூர் நகராட்சி மன்ற உறுப்பினரும், அவ்வூர் தமிழரசுக் கழகத் தலைவருமான திரு. ஒ. கணேசன் அவர்களின் தம்பி **திரு. ரா. மாரியப்பனுக்கும்,**

சிறுவஞ்சூர் திரு ரத்தின சபாபதி முதலியார் மகள் **திருமதி. காமாட்சிக்கும்** 14-9-50-ல் திரு. அ. வை. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்களால் தமிழ் முறைப்படி திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. திருவாளர்கள் ம. பொ. சி., கு. மா. பா., லூயிஸ், விசுவநாதம் ஆகியவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர். மணமக்களின் சார்பாக 'தமிழ் முரசு' வளர்ச்சிக்காக ரூ. 25-ம், திருவள்ளூர் தமிழரசுக் கழகத்திற்கு நன்கொடையாக ரூ. 10-ம் அளிக்கப்பட்டன.

இஸ்லாமியக் கல்லூரி

கடந்த 11—9—50 மாலை வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் திரு. கா. மு. ஷெரீப் தமிழ் மாணவர் மன்றத்தைத் துவக்கி வைத்துப் பேசினார். தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் திரு. கா. அப்துல் கபூர் தலைமை வகித்தரர்.

கிருஷ்ணன் - இலக்குமிகாந்தம்

திருவள்ளூர் ஜவுளி வியாபாரம் திரு. இ. வெ. தட்சிணாமூர்த்தி செட்டியார் மகனும் தமிழரசுக் கழக அங்கத்தினருமான திரு. த. கிருஷ்ணனுக்கும், சென்னை தேங்காய் வியாபாரம் பாலுசெட்டியார் மகள் திருமதி இலக்குமிகாந்தத்திற்கும் 14—9—50 வியாழனன்று திருவள்ளூரில் திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் நண்பர்களாலும் கழகங்களாலும் வாழ்த்துகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. 'தமிழ் முரசு' வளர்ச்சிக்காக ரூபாய் ஐந்து நன்கொடை அளிக்கப்பட்டது.

கட்டபொம்மன் வாரம்

சென்னை நகர தமிழரசுக்கழக ஆதரவில் செப். 29உ கூடிய ஊழியர்கள் கூட்டத்தில் அக். 15 முதல் ஒரு வாரத்தை கட்டபொம்மன் நினைவு வாரமாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டு திரு. ம. பொ. சி. தலைமையில் விழாக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

Edited, Printed & Published by M. P. Sivagnanam at the Kannagi Achaga
1-29, Irusappa Gramani Street, Triplicane, MADRAS-5.